கோகுலம்


GOKULAM செப்டெம்பர் '99 ரூ. 6/-



குழந்தைகளையும் கவரும் 'கல்கி'யின் கதைகள்!

பிருந்தாவனம்

வரைந்து பழகுங்கள்



படத்தை நிறைவு செய்யுங்கள்!



''நான் செய்தித்தாளை வந்தவுடனே படிக்க மாட்டேன்.''


''ஏன்?''

''அதில் சூடான செய்திகள் இருக்குமே. கொஞ்சம் ஆறிய பிறகே படிப்பேன்!''


— இரா. கமலக்கண்ணன்



நிழல் உருவங்கள்



கோகுலம் செப்டெம்பர் '99
மலர்: 17 இதழ்: 8



அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

அமரர் கல்கி அவர்களுடைய நூற்றாண்டு இந்த செப்டெம்பர் மாதம் ஒன்பதாம் தேதியுடன் நிறைவடைகிறது.

இந்த நூற்றாண்டின்போது உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் ஆங்காங்கே நூற்றாண்டுக்குழு அமைத்து, விழா எடுத்து, அவரது நினைவைப் போற்றினார்கள். பல பல்கலைகழகங்களும் அவரது இலக்கியப் படைப்புகள் பலவற்றையும் ஆய்வு செய்து கருத்தரங்குகள் நடத்தின.

அமரர் கல்கி, தமிழ் வசன இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்கு அரும் தொண்டாற்றினார். அதோடு நமது புராதன கலைகள் பலவற்றின் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டார். அதனால் அவரது நினைவைப் போற்றும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே அரங்கேறியுள்ளன.

இதெல்லாவற்றையும் விட ஆச்சர்யம், சிறுவர் சிறுமியர் மிகவும் ஆர்வத்துடன் 'கல்கி' நூற்றாண்டு விழாவில் பங்கேற்றதுதான்! பல்வேறு பள்ளிக்கூடங்களில் அமரர் கல்கி நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. தவிர, பெரியவர்கள் நடத்திய விழாக்களில் கூட குழந்தைகளுக்கு இடம் தரப்பட்டு, 'கல்கியின் கதாபாத்திரங்கள்' என்ற தலைப்பில் மாறுவேடப் போட்டி முதலானவை நடைபெற்றுள்ளன!

இதிலிருந்து என்ன தெரிகிறது? ராமாயணம், மகாபாரதம் போல குழந்தைகளுக்கு 'கல்கி' எழுதிய சரித்திரக் கதைகளையும் கூறி பெற்றோர் அவர்களை வளர்க்கிறார்கள் என்பதுதான்! குழந்தைகளிடம் நற்பண்புகள் வளர, கதை சொல்வது போல் சிறந்த உபாயம் வேறு எது?

அப்பா, அம்மா அல்லது தாத்தா, பாட்டியிடம் கதை கேட்பது தவிர, நீங்களே அமரர் கல்கியின் ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துப் பாருங்கள். நீங்கள் உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளியில் படிக்கிற வயதில் இருந்தால் 'கல்கி'யின் கதைகளை மட்டுமின்றி அவரது கட்டுரைகளைக்கூட ரொம்ப ரசிப்பீர்கள். ஒரே ஒரு பக்கத்தைப் படித்து விட்டால் போதும், பிறகு நூல் முழுவதையும் படித்து முடிக்கும்வரை கீழே வைக்க மாட்டீர்கள். அவரது வேறு பல நூல்களையும் படிக்கின்ற ஆர்வம் தன்னால் உண்டாகும்.

இதோ, இருபதாம் நூற்றாண்டு முடிவடையும் தருவாயில் உள்ளது! ஆனால் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு அமரர் கல்கியின் நாவல்களும் சிறுகதைகளும் புத்தம் புதியன போல் விளங்கி, புதிய வாசகர்களை ஈர்த்துக் கொண்டிருக்கும்.

இதை உணர்த்தும் வகையில்தான் இந்த இதழ் மேலட்டையில் சிறுவன் **பிரசாந்த்** சிறுமி **பூஜா** ஆகியோர், அமரர் கல்கியின் அமர கதாபாத்திரங்களான **அருள்மொழி வர்மன், பூங்குழலி** ஆகியோரது சித்திரங்களை டீ ஷர்ட்டில் பதித்து பெருமிதத்துடன் அணிந்திருக்கிறார்கள்! (வண்ணப் படம்: **ஸ்ரீஹரி**)



அன்புடன்


கி. ராஜேந்திரன்
ஆசிரியர்


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.


கோகுலம்

செப்டெம்பர் 1999

இந்த இதழில்...











பணமோ- குணமோ-


படம்: ஜிஜோ

கதை: வி. சுகன்யா






மறுவாரம் கிராமத்தில் — ஏழை கந்தன் வீட்டு வாசலில் ஒரு நூறு ரூபாய் நோட்டை வைத்து விட்டு மூவரும் பக்கத்திலிருந்த மரத்துக்குப் பின்னால் ஒளிந்திருந்து கவனித்தனர். வீட்டிலிருந்து வெளியே வந்த கந்தன் —
ஐயோ! இது யாருடைய பணம்?
பார்த்தியா பணத்தை எடுத்துக்கிட்டு நடையைக் கட்டிட்டார்.
கொஞ்சம் பொறு.. அவரைப் பின்தொடரலாம்.
பண்ணையார் பங்களாவுக்குள் நுழைகிறாரே!



ஐயா இந்த நூறு ரூபாய் என் வீட்டு வாசலில் கிடந்தது. அது என்னுதில்லை. யாருதுன்னு விசாரிச்சுக் கொடுத்துடுங்க.
?
விசாரணை எல்லாம் வேணாம் கந்தா.
கொடு. அது என்னுது. இன்னிக்கு எல்லாம் தேடி அலைஞ்சேன்.
நல்லதுங்க. வர்றேன்.



பிறகு—
இப்போ புரிஞ்சுதா மாலினி?..
... இரு வித்யா நான் சொல்றேன். பணத்தின் அடிப்படையில் குணத்தை எடை போடக்கூடாது. நல்ல குணமோ - கெட்ட குணமோ - யாரிடமும் இருக்கலாம்.
தேவி என்னை மன்னிச்சிடு... வித்யா, நீயும்தான்!



புதிர் உலகம்!

I. சேலத்து மாம்பழம் எத்தனை?

வைகாசி மாதம் வழக்கமாக மாம்பழ சீசன் முடிந்து விடும். ஆடி பிறந்தவுடன் மாம்பழம் கிடைப்பது சற்றுக் குறைவு. ஆடிப் பெருக்கிற்கு படைப்பதற்குக்கூட மாம்பழம் தேடித்தான் வாங்க வேண்டும்.

மாறாக இவ்வருடம் ஆடி மாதம் பிறந்தும் தாராளமாக மாம்பழம் கிடைக்கிறது. திருச்சிற்றம்பலத்துப் பண்ணையார் அருணாசலம் சேலம் சென்று திரும்பும்போது கூடை நிறைய மாம்பழங்கள் வாங்கி வந்தார். அவருக்கு அகிலா, கமலா, விமலா என்று மூன்று பெண்கள் உண்டு. ஒவ்வொரு பெண்ணிற்கும் ஒவ்வொரு குழந்தையுமுண்டு. பண்ணையார் மாம்பழங்களைக் காலையில் கொடுக்கலாம் என்று நினைத்துத் தூங்கச் சென்று விட்டார்.

பெரிய பெண் அகிலா வந்து ஒரு மாம்பழத்தை எடுத்து தன் குழந்தையிடம் கொடுத்துவிட்டு மற்றவைகளை மூன்று பங்கிட்டு ஒரு பங்கை தானெடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

கமலா வந்தாள். தன்னுடைய குழந்தைக்கு ஒரு மாம்பழத்தை எடுத்துக் கொடுத்துவிட்டு மற்றவைகளை மூன்றாகப் பங்கிட்டு ஒரு பங்கை தானெடுத்துச் சென்றாள்.

விமலா வந்தாள். அவளுக்கு அகிலா, கமலா பழங்களை எடுத்துச் சென்றது தெரியாது. தன்னுடைய குழந்தைக்கு ஒரு பழத்தைக் கொடுத்து விட்டு மற்றவைகளை மூன்றாகப் பங்கிட்டு ஒரு பங்கை எடுத்துச் சென்றாள்.

காலையில் எழுந்ததும் பண்ணையார் கூடையிலிருந்த பழங்களை தன் மூன்று பெண்களுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தார். அவர் சேலத்திலிருந்து வாங்கி வந்த பழங்கள் எத்தனை?

– சிவ.மணவழகி,
திருச்சிற்றம்பலம்.

II. பெருக்கல் விடை சரி பார்க்க எளிய வழி!

கடினமான பெருக்கல் கணக்குகளைப் போட்டு விட்டு விடை சரிதானா என்று பார்க்க இதோ ஒரு எளிய வழி.

உதாரணம்: 547 ஐ 876 ஆல் பெருக்கினால் 479172 என விடை வரும். இதை எப்படிச் சரி பார்ப்பது?

5+4+7 = 16 = 1+6=7

8+7+6 = 21 = 2+1 = 3

7 ஐயும் 3 ஐயும் பெருக்க 21 வரும். 21ஐயும் சுருக்க 2+1 = 3

விடை எண்களையும் இதேபோல் கூட்ட வேண்டும். 4+7+9+1+7+2 = 30 = 3+0 = 3

பெருக்கும், பெருக்கப்படும் எண்களின் விடையும் விடை எண்களின் கூட்டுத் தொகையும் ஒரே எண்ணாக இருந்தால் விடை சரி.

– சி.பி. சிவமேனி,
திருச்சி.

III. எண்களின் சிறப்பு

15x93 இந்த இரண்டு எண்களைப் பெருக்கினால் கிடைக்கும் விடை = 1395. இதில் கவனிக்க வேண்டியது ஒன்று உள்ளது. பெருக்கும் இரண்டு எண்களையும் விடையையும் பாருங்கள்.

15x93 =1395

பெருக்க கொடுக்கப்பட்ட இரண்டு எண்களும், பெருக்கினால் கிடைக்கும் விடையில் உள்ள எண்களும் அதே எண்கள்தான். ஆனால் இடம் மாறி உள்ளன. இதேபோல் வேறு எண்களைப் பார்க்கலாம்!

– ஏ.வி. சுப்பராமன்

21 X 87 = 1827
27 X 81 = 2187
35 X 41 = 1435

3 X 51 = 153
6 X 21 = 126
8 X 473 = 3784
9 X 351 = 3159

IV. மறைந்துள்ளவர்களைக் கண்டுபிடியுங்கள்!

3 பையன்களும் 1 பெண்ணும் கட்டத்தில் ஒளிந்திருக்கிறார்கள். ஒரு வாசல்தான் உண்டு. ஒரு கட்டத்துக்கு ஒருமுறைதான் போகலாம். மீண்டும் செல்லக் கூடாது. மேலே ஏறலாம். கீழே இறங்கலாம். வலதுபக்கம் திரும்பலாம். இடது பக்கமும் போகலாம். கட்டங்களுக்குக் குறுக்கே போகக் கூடாது. என்ன செய்யத் தயாரா?

(அம்புக் குறியிட்டுள்ள இடத்திலிருந்து தொடங்க வேண்டும்)

– ஏ.எஸ். யோகானந்தம், ஒளவையார்பாளையம்

க	ழ	சா	ச்
ம்	அ	மி	து
மா	ள்	மு	த்
ப்	ப	ன்	ம
த	ன்	மு	ரா
ந்	↑க	த்	து

விடை


1 : மாம்பழங்கள் 25

விளக்கம் அமலா... 25-1 = 24 = 8 8 8
கமலா... 16-1 = 15 = 5 5 5
விமலா .... 10-1 = 9 = 3 3 3

பண்ணையார் காலையில் தன் பெண்களுக்குக் கொடுத்தது தலா இரண்டு மாம்பழங்கள்.

அமலாவிற்குக் கிடைத்தது 8+2+1 =11
கமலாவிற்குக் கிடைத்தது 5+2+1 = 8
விமலாவிற்குக் கிடைத்தது 3+2+1 = 6
கூடுதல் 25

IV



நீங்களும் மாஜிக் செய்யலாம்!

உங்களுக்கு விருப்பமான ஸ்வீட்!

மாஜிக் செய்து உங்கள் நண்பர்களுக்குப் பிடித்தமான ஸ்வீட்களை சுவைக்கச் செய்ய வேண்டுமா? இதோ செய்யத் தயாராகுங்கள்.

தேவையானவை:

ஸ்வீடெக்ஸ் மாத்திரை 2 (சர்க்கரை மாத்திரை) எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

எப்படி செய்வது?

நிகழ்ச்சிக்கு முன் இரண்டு ஸ்வீடெக்ஸ் வில்லைகளை எடுத்து உடைத்து பவுடராக்கிக் கட்டை விரலிலும் ஆட்காட்டி விரலிலும் தடவிக் கொள்ளுங்கள்.

உங்கள் நண்பர்களிடம் அவர்களுக்குப் பிடித்தமான ஸ்வீட்டை சிறிய காகிதத்தில் எழுதச் சொல்லுங்கள். ஒவ்வொருவரையும் மேடைக்கு அழைத்து அவர்களின் பேப்பரை வாங்கிக் கொண்டு கண்களை மூடச் சொல்லுங்கள். உங்கள் நண்பரிடம் அவர் எழுதிய இனிப்பை நினைத்தபடி நாக்கை நீட்டச் சொல்லுங்கள். நாக்கில் நீங்கள் கட்டை விரல் மற்றும் ஆட்காட்டி விரல்களின் மூலம் பிடித்த பேப்பரைத் தடவுங்கள். சுவையை உணர்ந்த நண்பர் ஆச்சரியத்துடன் கண் திறப்பார்.

காரணம்: காகிதத்தில் ஸ்வீடெக்ஸ் பவுடரை விரல்களால் தடவுவதால் அது ஒட்டிக் கொள்கிறது. ஸ்வீடெக்ஸில் வெறும் இனிப்புச் சுவை மட்டுமே இருக்கும். ஆனால் உங்கள் நண்பர் தாம் நினைத்த ஸ்வீட்டிலேயே கவனம் செலுத்துவதால் இந்த இனிப்பு அவருக்கு அந்த ஸ்வீட்டையே நினைவுப்படுத்துகிறது.



துப்பறியும் மாது!

எஸ்.ஆர்.ஜீ. சுந்தரம்

காட்சி – 1

இடம்: மாது வீடு

(மாது துப்பறியும் நாவல் படித்துக் கொண்டிருக்கிறான்)

கலா: ஏ! மாது! இது என்ன புது துப்பறியும் நாவலா?

மாது: ஆமாம்!... ரொம்ப விறுவிறுப்பா இருக்கு! இப்ப என் கூட எதுவும் பேசாதே!

கலா: சரி, பேசலே! ஆனா எனக்கென்ன... அங்கே அப்பாவைப் பாரு. என்ன செய்துக்கிட்டிருக்கிறார்னு...

மாது: ம்... அப்பா அங்கே என் அலமாரியைத் திறந்து என்ன செய்துக்கிட்டிருக்காங்க? ஐய்யய்யோ என்னோட பழைய துப்பறியும் புத்தகங்களையெல்லாம் எடுத்துத் தரையிலே போட்டுக்கிட்டிருக்காரே... அப்பா, என்னப்பா இது?

அப்பா: டேய், அலமாரி நிறைய துப்பறியும் நாவல்! எல்லாம் பழசாகி மக்கிப் போய், செல் அரிக்கிற நிலைமைக்கு வந்தாச்சு... தூக்கி எடைக்குப் போட்டுட வேண்டியதுதான்!

மாது: அப்பா அதெல்லாம் முடியாது. நான் இதையெல்லாம் மறுபடியும் ஒரு தடவை படிக்கப் போறேன். அப்படியே வைங்கப்பா!

கலா: ஆமாம்ப்பா. அப்படியே வச்சுடுங்கோ! இதையெல்லாம் படிச்சு மாது அண்ணா உலகத்திலேயே பெரிய துப்பறியும் நிபுணராகப் போறான்! இல்லே மாது?

மாது: கிண்டலா? நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் நான் ஒரு பெரிய துப்பறியும் நிபுணனாகப் போறேன்! அதான் என்னோட ஆசை! (அப்போது அவர்கள் மாமா உள்ளே வருகிறார்)

கலா: அப்பா மாமா வரார்!

அப்பா: வாங்க! உட்காருங்க!

மாமா: என்ன துப்பறியும் நிபுணர், அது இதுன்னு பேசிக்கிட்டிருந்திங்க?

கலா: மாது உலக மகா துப்பறியும் நிபுணராகப் போறானாம்!

மாமா: அப்படியா? என் வாழ்த்துகள்!

கலா: என்ன வாழ்த்துகள்? சும்மா ஏதோ நாலு கதைகளைப் படிச்சுட்டு, அவன் தன்னை இப்பவே துப்பறியும் நிபுணனா நினைச்சுக்கிட்டிருக்கான். மாமா, அவன் அடுத்த வருஷம் டென்த் போகணும்... நினைவு வச்சுக்கச் சொல்லுங்க!

அம்மா: ஆமாம்! இதையெல்லாம் விட்டுட்டு அவனை நல்லா பாடப் புத்தகங்களைப் படிக்கச் சொல்லுங்க!

அப்பா: ஆமாம்! இவன் பெரிய துப்பறியும் நிபுணனா வரணும்னு யார் இங்கே கவலைப் படறாங்க?

மாது: மாமா! யார் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். நான் துப்பறியும் நிபுணனா வரத்தான் ஆசைப்படறேன். இதுலே என்ன தப்பு? எவ்வளவு பெரிய திருட்டுகளையெல்லாம் கண்டு பிடிக்கப் போறேன் பாருங்க!



மாமா: அடேயப்பா! என்ன இவ்வளவு பிடிவாதமா இருக்கே?

மாது: ஆனா இது தப்பா?

மாமா: ம்! தப்பு இல்லே! எவ்வளவோ பேர் சின்ன வயசுலேயே நான் இப்படி ஆகணும்னு நினைச்சு அப்படியே ஆகியிருக்காங்க! ஆனா உன்னால முடியுமான்னு ஒரு யோசனை!

மாது: நிச்சயமா முடியும்!

மாமா: சரி, ஒண்ணு செய்வோம்! நாம எல்லோரும் சேர்ந்து மாதுவுக்கு ஒரு துப்பறியும்

வேலை கொடுப்போம்! அவன் சரியா துப்பறிஞ்சு கண்டுபிடிக்க வேண்டியதைக் கண்டுபிடிச்சுட்டா, அவன் ஆசைக்குக் குறுக்கே நாம நிக்கக் கூடாது! அப்படி செஞ்சுட்டா அவன் எதிர்காலத்திலே ஒரு பெரிய துப்பறியும் நிபுணர்தான்!

கலா: அப்படி கண்டுபிடிக்கல்லேன்னா, பூப்பறிக்கும் நிபுணர்தான்!

மாது: மாமா. செய்யுங்க, நான் தயார்!

மாமா: சரி! நாங்க நாலு பேரும் யோசனை பண்ணி நாளைக்கே உனக்கு ஒரு துப்பறியும் வேலை தரப் போறோம்!

காட்சி – 2

இடம்: மாது வீடு

மாமா: மாது! என்ன சோதனைக்குத் தயாரா?

மாது: ம்! நான் தயார்!

மாமா: இதோ பார். இது என்னோட கைக்கடிகாரம்! இதை அந்தப் பூஜை அறையிலே ஒரு இடத்திலே வைக்கப் போறேன். நீயும் எங்க கூட உள்ளே வந்து, கைக்கடிகாரத்தை நாங்க வைக்கிற இடத்தைப் பார்த்துக்கலாம்.

மாது: அப்புறம்...?

கலா: அப்புறம் நாங்க ஒவ்வொருத்தரா அந்த அறைக்குப் போயிட்டு வருவோம்! அப்போ எங்க நாலு பேர்லே ஒருத்தர் அந்தக் கைக்கடிகாரத்தை எடுத்து மறைச்சுக்கிட்டு வந்துடுவோம்.

மாமா: அப்படி கைக்கடிகாரத்தை எடுத்து மறைச்சுக்கிட்டது யாருன்னு நீ கண்டுபிடிக்கணும்!

கலா: என்ன மாது யோசனை? துப்பறியும் நிபுணருக்கு கலக்கமா?

மாது: ஏய்! சின்னவளா இருந்துக்கிட்டு துள்ளாதே. மாமா நான் தயார்!

மாமா: சரி, நீயும் எங்ககூட பூஜை அறைக்கு வா! (எல்லோரும் பூஜை அறைக்குப் போகிறார்கள்)

இதோ பார், இந்த சரஸ்வதி படத்தை ஒட்டி கீழே இருக்கிற இந்த மரப் பலகைமேல இந்தக் கைக்கடிகாரத்தை வைக்கறேன். சரி! இப்போ எல்லாரும் பழையபடி ஹாலுக்கு வந்துடுங்க!

அம்மா: இப்போ ஒவ்வொருத்தரா அந்தப் பூஜை அறைக்குப் போயிட்டு வரப்போறோம். மொதல்லே நானே போயிட்டு வரேன்! (அம்மா போய் வருகிறார்)

மாமா: ம்! அம்மா வந்தாச்சு! அடுத்தது நான் போறேன்(மாமா போய் வருகிறார்.)

கலா: அப்பா! மாமா வந்தாச்சு.. இப்ப நீங்க போங்க! (அப்பா போய் வருகிறார்)

மாமா: ம்! கலா, அப்பாவும் வந்தாச்சு, இப்போ நீ போ! (கலா போய் வருகிறாள்)

கலா: ம்! எல்லாரும் போய் வந்தாச்சு... துப்பறியும் நிபுணர் சார்! இப்போ சொல்லுங்க... எங்க நாலு பேரிலே யார் 'வாட்ச் திருடர்'?

மாது: கொஞ்சம் இருங்க.. நானும் பூஜை அறைக்குப் போய், நீங்க



கடிகாரம் வச்சிருந்த இடத்தை ஒரு நிமிஷம் பார்த்துட்டு வந்துடறேன்! (மாது போய்ப் பார்த்துவிட்டு வருகிறான்.)

மாமா: என்ன மாது கண்டுபிடிச்சுட்டியா?

மாது: கண்டுபிடிச்சுட்டேன்! கொஞ்சம் இருங்க! கலா உன் வலக்கையை நீட்டு! (கலா கையை நீட்ட, மாது கைவிரல்களை முகர்ந்தபடி) ம்! மாமாவோட கைக்கடிகாரத்தை எடுத்தது இந்தக் கலாவேதான்! கலா... சொல்லு சரிதானே?


கலா: ம்! சரி! நான்தான் எடுத்தேன். ஆனா

நீ ஏதோ குருட்டு மதிப்பாதான் சொல்லி யிருக்கே!

மாது: இல்லை, நீதான் கடிகாரத்தை எடுத் தேங்கறதை என்னால நிருபிக்க முடியும். முதல்லே அந்தக் கடிகாரத்தைக் கொடு.

கலா: இப்போ அந்தக் கடிகாரம் எங்கிட்டே இல்லை. இந்த மூணு பேர்ல யார்கிட்டே இருக்குன்னு கண்டுபிடி பார்க்கலாம்!

மாது: ஓஹோ! நான் பூஜை அறைக்குப்



போயிருந்தபோது கடிகாரத்தை யாருக்கோ மாத்திட்டே போலிருக்கு? பரவாயில்லை, அதையும் கண்டுபிடிக்கறேன். அப்பா, உங்க வலக் கையை நீட்டுங்க! (கை விரல்களை முகர்ந்து விட்டு) அம்மா, உங்க வலக் கையைக் காட்டுங்க! (கை விரல்களை முகர்ந்து விட்டு) மாமா, உங்க இடக்கையை நீட்டுங்க! (கை விரல்களை முகர்ந்துவிட்டு) மாமா! சந்தேகமில்லாம, இப்ப அந்தக் கடிகாரம் உங்ககிட்டேதான் இருக்கு! அநேகமா அது உங்க வெத்தலைபாக்குப் பெட்டி யிலதான் இருக்கும்! எடுங்க வெளியிலே!

மாமா: மாது! நீ ஜெயிச்சுட்டே! கைகொடுடா! எப்படி இவ்வளவு சரியா எல்லாத்தையும் கண்டுபிடிச்சே? அதுவும் குறிவச்சு பளிச்சுன்னு கலாதான் எடுத்தான்னு சொன்னே?

மாது: நீங்க கடிகாரத்தை வச்சபோது அந்த இடத்திலே, அதான் அந்த மரப் பலகைமேல, சந்தனத்தோடு ஒரு கிண்ணம் இருந்தது. கீழே ஜன்னல் ஓரமா ஒரு நீள ஊதுவத்திப் பெட்டியும் இருந்தது. நீங்க எல்லாரும் கடிகாரத்தை எடுக்க பூஜை அறைக்குப் போயிட்டு வந்ததும், நான் உள்ளே போய் நல்லா கவனிச்சேன். ஜன்னல் ஓரமிருந்த அந்த ஊதுவத்திப் பெட்டி, இப்போ மரப் பலகைமேல இருந்தது. கிண்ணத்திலே இருந்த சந்தனமும் பலகைமேல கொட்டியிருந்தது. ஊதுவத்திப் பெட்டியோட முனையும் சந்தனத்திலே நனைஞ்சு ஊறிப் போயிருந்தது. இதையெல்லாம் கவனிச்சப்போ, கைக் கடிகாரத்தை சுலபமா கைநீட்டி எடுக்க முடியாமத்தான் யாரோ ஊதுவத்திப் பெட்டி முனையால் கடிகாரத்தைத் தள்ளி எடுத்திருக்கணும். அந்த சமயத்திலேதான் பக்கத்திலேயிருந்த சந்தனக் கிண்ணமும் எதிர்பாராம கவிழ்ந்து சந்தனம் கொட்டி யிருக்கணும்! கடிகாரத்தைத் தள்ளி இழுத்த அடையாளமும் சந்தனத்துலே தெரிஞ்சது. கீழே ஒரு சின்ன ஸ்டூலும் போட்டிருந்தது. என்ன கலா, இப்ப புரியறதா? நீதான் உயரம் காணாம ஸ்டூலை நகர்த்திப் போட்டிருக்கே.... அப்படியும் படத்து ஓரமா இருந்த கடிகாரத்தை உன் கையால் எட்ட முடியலே. அதனால ஊதுவத்திப் பெட்டியை எடுத்து கடிகாரத்தைத் தள்ளி எடுக்க முயற்சி பண்ணியிருக்கே... அப்போ தவறி சந்தனமும் கொட்டியிருக்கு. கடிகாரத்திலே பட்ட அந்தச் சந்தனம் உன் கையிலேயும் பட்டிருக்கு! மாமாவுக்கு இடக்கைப் பழக்கம்! அதனாலதான் நீ கொடுத்த கடிகாரத்தை அவர் இடக் கை நீட்டி வாங்கியிருக்கார். அவர் கையிலேயும் சந்தன வாசனை! மாட்டிக்கிட்டார்!

மாமா: சபாஷ்! ஆனா அந்தக் கடிகாரம் என் வெத்தலைப் பெட்டியிலேதான் இருந்ததுன்னு எப்படி கண்டுபிடிச்சே?

மாது: ரொம்ப சுலபம்! உங்க சட்டையிலே பாக்கெட் இல்லை. கடிகாரத்தை வேற எங்கே ஒளிச்சு வைக்க முடியும்?

மாமா: மாது! நீ நிச்சயம் துப்பறியும் நிபுணனா ஆயிடுவே. கலா! இப்போ மாதுவுக்கு வாழ்த்து சொல்லலாமா?


கலா: சொல்லலாம்! எல்லோரும் சொல்லுங்கோ!

மூவரும்: துப்பறியும் நிபுணர் மாதுவுக்கு வாழ்த்துகள்!



பிடித்தது?

எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் கொடைக்கானலுக்குச் சுற்றுலா சென்று திரும்பியிருந்தான். அவனை அழைத்து சுற்றுலா பற்றி விசாரித்தேன். கடைசியில் "கொடைக்கானலில் உனக்குப் பிடித்தது என்ன?" என்று கேட்டேன். சிறிதும் யோசிக்காமல் "எனக்குப் பிடித்தது சளிதான்!" என்றானே பார்க்கலாம்! என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.




— சி. ராஜசேகரன்,
ராஜபாளையம்.

பழம்பூ!

அன்று வெள்ளிக்கிழமை. அம்மா என்னிடம் "பழம் பூ வாங்கிட்டு வா" என்று கையில் பணம் கொடுத்தார். அருகில் இருந்த என் தம்பி, "ஏம்மா காசு கொடுத்து பழம் பூ வாங்கணும்? நல்ல பூவே வாங்கலாமே!" என்றான். "ஏய், அம்மா சொன்னது பழமும் பூவும்" என்று விளக்கினேன் நான். உடனே அம்மா "பூ, பழம் வாங்கிட்டு வா" என்றார் சிரித்துக் கொண்டு.

— மூகதி. சுபா,
திருவண்ணாதபுரம்.



உள்ளதை அள்ளி...

தாத்தா, பாட்டியுடன் ஊருக்குச் சென்றேன். பேருந்தை விட்டு இறங்கியதும் தாத்தா ஆட்டோ பிடித்தார். ஏறப்போன எங்களை அவசரமாகத் தடுத்தார் தாத்தா. நாங்கள் புரியாமல் விழிக்க "ஏறுங்க சார்" என்றார் ஆட்டோ டிரைவர். "என்னப்பா, 'உள்ளதை அள்ளித்தா'ன்னு எழுதி வச்சிருக்கே? எங்கிட்ட இருக்கிறதை உங்கிட்டே கொடுக்க முடியுமா?" என்றார் தாத்தா கோபத்துடன். உடனே ஆட்டோ டிரைவர், "சார், அது படத்தோட பேரு. உள்ளத்தை அள்ளித்தா என்பதற்கு பதில் உள்ளதை அள்ளித்தான்னு எழுதிட்டான். நீங்க பயப்படாமல் ஏறுங்க சார்" என்றவுடன் நாங்கள் மூவரும் ஆட்டோவில் ஏறினோம்.

— உ. காசிநாதன்,
சோழபுரம்.





ஒண்ணு....

எங்கள் அப்பாவைத் தேடி அவரது நண்பர் வீட்டுக்கு வந்தார். நான் அவரை வரவேற்று, உட்கார வைத்தேன். அப்பா வெளியில் சென்றுள்ள விஷயத்தையும் கூறினேன். உடனே அவர், ''அப்பா வந்தால் நான் ஒண்ணு எழுதித்தரச் சொல்லிக் கேட்டேன் என்று ஞாபகப்படுத்து'' என்றார். உடனே அருகில் இருந்த என் தம்பி, ''மாமா, ஒண்ணு எழுத அப்பா எதற்கு? நானே எழுதித் தந்துடறேன்'' என்று சொல்லவும் மாமா சிரித்து விட்டார்.


– ஜூனியர் தேஜ்.

பாட்டை நிறுத்தியது ஏன்?

சாரி கேள்!

விடுமுறைக்கு ஊருக்குப் போயிருந்தோம். என் தங்கை ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும் போது மாமாவின் காலை நறுக்கென்று மிதித்து விட்டு ஓடினாள். இதைக் கவனித்த என் அப்பா அவளை அழைத்து ''மாமாவிடம் சாரி கேள்'' என்றார். அவளும் மாமாவிடம் சென்று, ''அப்பா சாரி கேட்டாங்க'' என்று சொல்லியிருக்கிறாள். மாமா அப்பாவிடம் வந்து ''எந்த சாரி, யாருக்கு?'' என்றார். அப்பாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''உங்கள் காலை மிதித்ததற்கு மன்னிப்புக் கேட்கத்தான் சாரி கேள்'' என்றேன் எனவும் மாமாவும் சிரித்தார்.

– சிவநந்தினி, தென்காசி.



கரண்ட் இல்லை!

நானும் நண்பனும் தனியார் பேருந்தில் ஏறி வந்து கொண்டிருந்தோம். பேருந்தில் பாட்டு பாடிக் கொண்டிருந்தது. பயணம் செய்து கொண்டிருந்த ஒரு வயதானவர் அந்தப் பாடலுடன் சேர்ந்து சத்தமாகப் பாட ஆரம்பித்தார். பயணிகள் அனைவருக்கும் இது கஷ்டமாக இருந்தது. எல்லோரும் சேர்ந்து அவரிடம் பாட்டை நிறுத்துமாறு கூறினோம். அவரோ சிறிதும் சட்டை செய்யாமல் பாடிக் கொண்டேயிருந்தார். டிரைவர் கோபம் அடைந்து பாட்டை நிறுத்தினார். உடனே பெரியவர் ''ஏன் பாட்டை நிறுத்திட்டீங்க?'' என்று கேட்டார். அதற்கு ''கரண்ட் இல்லைங்க'' என்றார் டிரைவர். ''சரி, கரண்ட் வந்த பிறகு பாட்டுப் போடுங்க'' என்று பெரியவர் கூற அனைவரும் சிரித்தோம்.

– அன்னை. பாக்யா, பாளை.




செளராஷ்டிர தேசத்தில் பிக்ஷு என்பவன் தன் மனைவி கலகையுடன் வாழ்ந்து வந்தான். கலகை குதர்க்க புத்தி உடையவள். கணவன் எது சொன்னாலும் நேர்மாறாக நடந்து கொள்வாள்.

"இன்றைக்கு முனிவர்களை உபசரிக்க வேண்டும்" என்று கூறினால் அன்றைக்குப் படுக்கையை விட்டே எழ மாட்டாள். அவளது இந்த நடவடிக்கை பிக்ஷுவுக்கு வருத்தத்தைத் தந்தது. தன் நண்பன் மித்திரனிடம் சொல்லி வருந்தினான்.

அவன், "ஆடிக் கறக்கிற மாட்டை ஆடித்தான் கறக்க வேண்டும். நீ முனிவர்களை உபசரிக்க விரும்பினால் இன்று இங்கே முனிவர்கள் சாப்பிட வருகிறார்களாம்! இது என்ன சத்திரமா, சாவடியா? நீதான் அவர்களுக்கு சமையல்காரியா? எதுவும் சமைக்காதே! அவ்வளவு ஏன்? படுக்கையை விட்டே எழுந்திருக்காதே!'' என்று சொல்லிப் பார்" என்றான்.

பிக்ஷு அவ்வளவுதான்! ஏற்கெனவே துர்க்குணியான அவளை இது மேலும் சோம்பேறி ஆக்கிவிடும் என்று பயந்தான். மித்திரன் அவனை உற்சாகப் படுத்தி அனுப்பினான்.



ஆர். பொன்னம்மாள்

மறுநாள்.

"கலகை! கஷ்டப்பட்டு கனி வர்க்கங்கள் கொண்டு வந்திருக்கிறேன்! அதிதி பூஜை என்ற பெயரில் யாருக்காவது கொடுத்து விடாதே!'' என்றான் பிக்ஷு பயந்தபடி.

"உங்களுக்கேன் இந்த அல்ப புத்தி! அதிதி பூஜை போன்ற உயர்ந்த புண்ணியம் உலகில் வேறுண்டோ?'' என்று கூறியபடி ஆசிரமத்துக்கு வந்தவர்களை நன்கு உபசரித்தாள் கலகை. மித்திரனின் யுக்தியை மனதுக்குள் பாராட்டினான் பிக்ஷு. இப்படியே செய்ய நினைக்கும் செயல்களுக்கெல்லாம் ஏறுக்கு மாறாகப் பேசி வாழ்க்கை நடத்தி வந்தான் பிக்ஷு. இந்தச்

சமயத்தில் முனிவர்கள் ஒன்று கூடி பிக்ஷுவைப் பிரதானமாகக் கொண்டு ஒரு யாகம் நடத்தத் தீர்மானித்தனர். பிக்ஷுவுக்கும் இதில் சம்மதம் தான்!

சக முனிவர்களிடம் தன் மனைவியிடம் தான் நடந்து கொள்ளும் முறை பற்றியும் சொல்லி எச்சரித்தார். அவர்களும் ஒப்புக் கொண்டனர்.

"கலகை! ஏதோ உலக நன்மைக்காக, தேவதைகளைத் திருப்தி செய்ய யாக



மாம். நான் முன்னின்று நடத்த வேண்டுமென்று கேட்டார்கள். முடியாதென்று சொல்லி விட்டேன். வேறு வேலையில்லை இவர்களுக்கு" என்று போலி சலிப்போடு கூறினார்.

கலகை கோபத்தோடு "உங்களிடம் வரவர நற்குணங்கள் குறைந்து கொண்டே போகின்றன! கட்டாயம் நீங்கள் முன்னின்று யாகத்தை நடத்த வேண்டும். அதற்கான நிவேதனங்களை நான் செய்து தருகிறேன். யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்கியம்?'' என்று அவரை ஊக்கப்படுத்தினாள்.

யாகம் தொடங்க தன்னாலான உதவிகளையும் செய்தாள். "எவ்வளவு நெய் செலவாகிறது? தினமும் ஹவிஸ் பொங்கச் சொல்

ஏட்டிக்குப் போட்டி!

கிறார்கள்! நீ பாவம்... தினமும் பாலைக் காய்ச்சி, புரை ஊற்றி, தயிரைக் கடைந்து வெண்ணையை உருக்கி எத்தனை கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது! வேள்வி பாதியில் நின்றால் நமக்கென்ன நஷ்டம்?" என்றார் அடுத்த நாள்.

"கஷ்டப்படுவது நான்! அதை வேண்டாமென்று சொல்ல உங்களுக்கென்ன உரிமை? யாகத்தைப் பாதியில் நிறுத்தினால் பாதகமில்லை என்று நினைக்கும் நீங்கள் நரகத்தைத்தான் அடைவீர்கள்!" என்று சினந்தாள்.

தினமும் ஹவிஸூம், நைவேத்தியமும் பக்தி சிரத்தையாகச் செய்து வந்தாள்.

"என்ன அக்கிரமமாயிருக்கிறது! முனிவர்கள் சாப்பிட்ட பிறகுதான் நாம் சாப்பிட வேண்டுமாம்! அதுவரை எனக்குப் பசி தாங்காது" என்றார் மூன்றாம் நாள்.

"பாபத்தை இப்படி நா கூசாமல் சொல்கிறீர்களே! மற்ற ரிஷிகள் கேலி செய்வார்களே என்ற பயம் கூடவா போய் விட்டது!" என்று கடுகடுத்தாள் கலகை.

அதோடு விருந்தினர் சாப்பிட்ட பிறகே போஜனம் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டாள்.

எந்தத் தவறும் செய்து விடக் கூடாதே என்று மனதுக்குள் ஒத்திகை பார்த்த பிறகே பேசுவது பிக்ஷுவுக்கு வெறுப்பாக இருந்தது.

யாகம் பூர்ணமாக நிறைவேறும் நாள். "இன்றைக்குப் பூர்ணாகுதி. நல்லபடி நடக்க வேண்டும்!" என்று மறதியாய் பிக்ஷு கூற கலகை பல்லே விளக்காமல் படுத்திருந்தாள்.

இதனால் வெறுப்புற்ற பிக்ஷு கலகையைத் துறந்து வேறொரு பெண்ணை மணந்து கொண்டார். கலகை கணவன் பிரிந்த பிறகே தன் தவறை உணர்ந்தாள்.

கணவனைப் பாடாய் படுத்திய கலகை இறந்து பிசாசாய் அலைந்தாள்.

பிக்ஷுவும் தன் ஆயுள் முடிந்து கரவீரம் என்ற தேசத்தில் தர்மதத்தன் என்ற வேதியனாகப் பிறந்து தர்ம நெறி தவறாமல் வாழ்ந்து வந்தார்.

கார்த்திகை மாத ஏகாதசி உபவாசமிருந்து இரவில் கண் விழித்து விஷ்ணு புராணத்தைப் படித்து, துவாதசியன்று அதிகாலை பெருமாள் கோவிலுக்குப் பூஜை செய்யப் புறப்பட்டார் தர்மதத்தன்.

கலகா பயங்கர ராட்சசி ரூபம் கொண்டு அவரைத் தின்ன ஓடி வந்தாள். தர்மதத்தன் பயந்து, "கோவிந்தா, மாதவா, ஸ்ரீஹரி" என்றபடி கெண்டியிலிருந்த துளசி தீர்த்தத்தை அவள் மேல் வீசினார். அதனால் அவளது பிசாசு வடிவம் போய் பெண்ணாகி நின்றாள்.

"ஸ்வாமி! தாங்கள் பெரிய ஹரி பக்தர் என்று தெரிகிறது. என் பாபம் நீங்கி முக்தி அடைய வழி சொல்ல வேண்டும்" என்று பாதங்களில் விழுந்து அழுதாள்.

"பெண்ணே! என் புண்ணியத்தில் பாதியை உனக்களிக்கிறேன்" என்று கூறி கைகளில் ஜலம் எடுத்து பூமியில் விட்டார். கலகைக்கு சொர்க்க வாசம் கிடைத்தது.


தர்மதத்தனே தசரதனாய் பிறந்து ஏகாதசி விரத பலனால் ஸ்ரீராமனை மகனாகப் பெறும் பேறடைந்தார்.

பாதி புண்ணியத்தைத் தானமாகப் பெற்று மோட்சமடைந்த கலகை கைகேயியாகப் பிறந்து தசரதர் உயிருக்கு எமனானாள். முற் பிறவிக் குணம் முழுதும் மாறாததால் ஊரார் தூற்ற, உலகம் பழிக்க நடந்து கொண்டாள். ஆயினும் புண்ணியத்தைத்தானம் பெற்றதால் தக்க சமயத்தில் யுத்தகளத்தில் தசரதர் உயிரையும் காத்தாள். தர்மதத்தன் கொடுத்த புண்ணியத்தால் அரசகுலத்தில் பிறந்து அரச குலத்தில் வாழ்ந்தாள். யாகத்துக்கு உதவிய புண்ணியத்தால் பேரழகி யாய் பிறந்ததோடு கணவனின் அன்பையும் பூரணமாய் அடைந்தாள்.

"காட்டில் இல்லாத மரம் எது?"

"கட்டு மரம், கைகாட்டி மரம், வெண் சாமரம்!"

– ஜி. குமரேசன், பாண்டமங்கலம்.



குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

5. வானில் இது திரண்டால் மழை பொழியும் (3)

8. கல்கத்தாவிலுள்ள புகழ் பெற்ற விமான நிலையம் (4)

10. ஒற்றைக்காலில் ஒய்யாரமாக நிற்கும் பறவை. கழுத்து நீண்டு காணப்படும் (2)

12. இதுவும் இரவும் சேர்ந்தால் ஒரு நாள் (3)

15. இரவு வானில் ஒளிர்பவை (4)

16. தமிழ் மாதங்களில் ஒன்று (4)

வலமிருந்து இடம்

1. மரபியலின் தந்தையான கிரிகர் மெண்டல் இந்தப் பயறை வைத்து சோதனை செய்தார் (4)


2. பழங்களில் ஒன்று. இது கொடியில் காய்க்கும் (4).

6. இந்தக் காயில் வைட்டமின் 'சி' அதிகம் (3)

7. வீட்டுப் பிராணிகளில் ஒன்று. இதன் மூலமே பாலும் பால் சார்ந்த பொருட்களும் நமக்குக் கிடைக்கின்றன (2)

9. மன்னனை இப்படியும் அழைக்கலாம் (4)

11. பூச்சி இனங்களில் ஒன்று. சிறுவர்கள் பிடித்து விளையாடுவர் (3)



மேலிருந்து கீழ்

1. வாழ்க்கைக்கு இன்றியமையாதது. இது அதிகமாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஆபத்து (3)

2. குற்றாலம் இந்த மாவட்டத்தில் உள்ளது (6)

7. விலங்குகளில் ஒன்று. அழகான விழிகளுக்கு உவமையாகக் கூறுவர் (2)

12. பறவையை இப்படியும் அழைக்கலாம் (3)

13. தேனீக்களின் மூலம் கிடைக்கும் ஒரு பொருள். இது மருத்துவ குணம் நிறைந்தது (2)

14. வீட்டிற்கு இது அவசியம் (2)


கீழிருந்து மேல்

3. இது இல்லாத வாழ்வு குறையற்றது (2)

4. கிழக்கு, மேற்கு என்பது – (2)


10. நான் என்பதற்கு பன்மை (2)


15. பயஸ் – பூபதி முதன்முறையாக சமீபத்தில் வென்ற மிகச் சிறந்த பட்டம் (6)



— மு. மாஜிதா முஜம்மில்,
பதினோராம் வகுப்பு,
இமாம் கஸ்ஸாலி மெட்ரிக் பள்ளி,
லால்பேட்டை.

விடை: 61 ஆம் பக்கம்


விரிசல் பானை!
கதை : ஆர். சரோஜா
படம் : மகேஸ்
பனையூரில் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு. பக்கத்து ஊரில் இருந்து தண்ணீரைக் கொண்டு வந்து விற்றுப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தார் கந்தன்.
ஒருநாள் கந்தன் சுமந்து செல்லும் பானை ஒன்றில் விரிசல் ஏற்பட்டது.
புதுப்பானை வாங்கவும் காசில்லையே!
விரிசல் பானையிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக வெளியேறியது.
நாட்கள் சென்றன. ஒருநாள்—
ஏய்! விரிசல் விழுந்தவளே, உன்னால் ஒரு பயனும் இல்லை.
ஏன் அப்படிச் சொல்றே?
பார், நான் நம் எஜமானுக்குப் பானை நிறைய நீர் கொடுத்து உதவறேன். நீ பாதிப்பானை நீர்தான் கொடுக்கறே!
நான் என்ன செய்வேன்?



பயன் கொடுக்காமல் வாழ்வது கேவலம்
விரிசல் பானை மிகவும் வருந்தியது. அன்று மாலை—
ஐயா! என்னால் ஒரு பயனும் இல்லை. வீசி எறிந்து விடுங்கள்.
யார் சொன்னது?
யார் சொன்னால் என்ன? நீங்கள் சுமந்து வரும் நீரில் பாதியை இழந்து விடுகிறீர்கள்.
நீ ஏன் வருத்தப்படறே? உன்னாலும் எனக்குப் பயன் இருக்கு.
எப்படி?
காலையில் காட்டறேன்.
மறுநாள் காலை—
நீ சிந்தும் நீர் இந்தச் செடிகளுக்கு விழுகிறது.
ஆமாம். பூவெல்லாம் அழகா பூத்திருக்கே!
நீ சிந்தும் நீர் வீணாகக் கூடாதுன்னு தான் வழியில் விதைகளைப் போட்டு வைத்தேன்.
அப்படியா?
இந்தப் பூக்களை விற்பதால் எனக்கும் வருமானம் வருது.
ரொம்ப சந்தோஷம் எஜமானே!



சல்மானும் அணில்களும்

இடைவேளை மணி ஒலித்தது. பள்ளியின் முதல்மாடி. ஒன்பதாம் வகுப்பு. ஆசிரியர் சென்றதும் மாணவர்களிடையே பேச்சும் சிரிப்புமாக மீண்டும் கலகலப்பு.

வகுப்பறைகளை விட்டு வெளியே வந்தனர் மாணவர்கள். வகுப்பு தலைவன் சல்மான் கூட்டத்தில் வந்து கொண்டிருந்தான்.

அவனைச் சுற்றிலும் நண்பர்கள்.

வகுப்பறையின் வெளி வராந்தாவில் உள்ள கட்டைச் சுவரில் அவன் பார்வை திடீரென்று விழுந்தது.

ஆம். அதுவேதான். ஓர் அணில்.

கீச் கீச் என்று கத்தியவாறு... இன்னொரு அணில் அதைத் துரத்திக் கொண்டு... எது வரக் கூடாதென்று அவன் நினைத்தானோ அது தலை காட்டி விட்டது.

சல்மான் நெஞ்சம் படக் படக்கென்று அடித்துக் கொண்டது. கைகள் வியர்த்துப் போயின.

"டேய்... அதே அணில்கள்... அதை விரட்டுங்கடா" என்றவாறு தனது நண்பர்களின் கவனத்தை அந்த அணில்களின்பால் திருப்பினான்.

எல்லோர் முகத்திலும் பதட்டம். அங்கு நின்ற மாணவர்கள் சப்தமிட்டு விரட்டினர். எதையோ அவைகளின் மீது எறியப் போவதைப் போல பாவனை செய்து மிரட்டினர்.

அவைகள் ஏன் நிற்கின்றன?

ஓடிச்சென்று சற்று தூரத்தில் உள்ள கொடுக்காய்ப்புளி மரத்தில் ஏறிக் கொண்டன.

'அப்பாடா!' சல்மான் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அணில்களைப் பார்த்தவுடன் அவனுக்கு ஏன் அந்தப் பதட்டம்?

அவனது மனக் கண்ணின் முன்னே அந்த நிகழ்ச்சி மீண்டும் ஓடியது.

பள்ளியின் முதல் மாடி கட்டப்பட்டு திறப்பு விழா நடந்திருந்த நேரம். மாணவர்களுக்கு மாடியில் வகுப்பறைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தன. ஒன்பதாம் வகுப்புக்கும் மாடிதான் என்ற செய்தி கிடைத்தபோது சல்மானுக்கும் அவனது வகுப்பு மாணவர்களுக்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

கீற்றுக் கொட்டகையில்தான் இது வரை வகுப்புகள் நடந்து வந்தன. இப்

முகம்மது ஹில்மி


பொழுதோ புதிய கட்டடம். அதுவும் மாடியில் என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்?

உற்சாகத்தோடு தங்களின் பைகளைத் தூக்கிக் கொண்டு மாடிக்கு ஓடினர். பெயிண்டின் மணம் மாறாத வகுப்பின் புத்தம் புதிய சூழல். புதிய இருக்கைகள். அவர்களுக்குக் கொண்டாட்டம்தான். தங்களுக்கு ' வசதியான இடங்களைப் பிடிப்பதிலும், தங்களுக்குப் பிரியமான நண்பர்களை தமதருகே அமரவைப்பதிலும் ஆர்வம் காட்டினர். ஒரே பரபரப்பு.

வகுப்புக்களுக்கு இடையே குறுக்குச் சுவர்கள் கட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக ரோலிங் ஷட்டர்கள் பொருத்தப்பட்டிருந்தன.

"இது என்ன?" என்று அந்தத் தடுப்பினைச் சுட்டிக் காட்டி புகழேந்தி கேட்டான்.

"இதுவா? நீ பார்த்ததில்லையா? இது தான் ரோலிங் ஷட்டர். பெரும்பாலான கடைகளில் இதுதானே உள்ளது. திறப்பதற்கும் அடைப்பதற்கும் மிகவும் எளிதானது. நாம் இருக்கும் இந்த எல்லா வகுப்பறைகளுமே ஒரு நீண்ட ஹாலாகும். ஷட்டரை இறக்கிவிட்டால் தனித்தனி வகுப்பறைகள். நமது பள்ளியில் இலக்கியக் கூட்டங்கள் மற்றும் பள்ளி சார்ந்த கூட்டங்கள் திறந்த வெளியில் தானே இதுவரை நடந்து வந்தன. ஆனால் இனி விழாக்கள் இந்த உள்ளரங்கில்தான்



நடக்கும். அதற்குத் தான் இந்த ஏற்பாடு" என்றான் சல்மான்.

இவ்விதச் சந்தோஷம் தரும் சூழலில் தான் ஒரு நாள் இரண்டு அணில்கள் எட்டிப் பார்த்தன.

அவைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. மிகவும் சுதந்திரமாக வருவதும் ஓடியாடி விளையாடுவதுமாக ஏக அமர்க்களம் செய்து கொண்டிருந்தன.

மாணவர்களுக்கும் அவைகளின் மீது ஒரு பிரியம் வந்து விட்டது. அவைகளுக்கு எவ்வித ஊறும் செய்யாமல் அன்பு காட்டினர்.

பின்னர் ஒருநாள்– அவை வாயில் எதையோ கவ்விக் கொண்டு வந்தன. ஆம் சணலின் நிறத்தில் பஞ்சு போன்ற பொருட்கள். பின்னர் ஜன்னலின் வழியே மேல் பகுதிக்குச் சென்றன. ஷட்டரின் மேல் சென்று மறைந்து விட்டன.

இவை எங்கே செல்கின்றன?

என்ன செய்கின்றன?

யாரும் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

பிறகு அடிக்கடி அவைகள் பஞ்சுத் திரட்டினை எடுத்துக் கொண்டு வரத் தலைப்பட்ட போதுதான் கூடுகட்டுகின்றன என்று மாணவர்களுக்குப் புரிந்தது.

அவைகளின் கூடு எப்படி இருக்கும்? கூடு கட்டியாகி விட்டதா? குட்டிகள் போட்டு விட்டனவா? எத்தனை குட்டிகள்? தெரிந்து கொள்ள எல்லோருக்கும் ஆசைதான்.

ஆனால் எப்படிப் பார்க்க முடியும்? ஷட்டரின் மேல் பகுதி மிகவும் உயரத்தில் இருக்கிறது. அப்படியே அந்த உயரத்தை அடைந்தாலும் மேல் கூண்டு முற்றிலும் மூடிய நிலையில் இருக்கும். இடுக்கின் வழியாக சரியாகப் பார்க்க முடியாது. இவ்விதம் பலவாறும் மாணவர்கள் விவாதித்துக் கொண்டனர்.

சல்மான் அவர்களைக் கடிந்து கொண்டான்.

'அதன் சுதந்திரத்தில் நாம் தலையிடக் கூடாது. அதன் கூடு அதன் வாழும் இடம். அதில் நாம் அத்து மீறி நுழைய முயல்வது கூடாது. நமது வீட்டில் நமக்குச் சம்பந்தமில்லாத அன்னியன் வந்து ஊறு செய்வதை நாம் சகித்துக் கொள்வோமா?'

வகுப்பிற்குச் சுற்றறிக்கை வந்தது. நாளை காலை இலக்கிய மன்றக் கூட்டம். பக்கத்து நகரத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற பேராசிரியர் நமது பள்ளிக்கு வருகிறார் என்ற செய்தியை ஆசிரியர் வாசித்துக் காட்டினார்.

மகிழ்வோடும் ஈடுபாட்டோடும் மாணவர்கள் இத்தகைய நிகழ்ச்சியில் கலந்து கொள்வர். அதிலும் பேச்சாளர் சுவையாகப் பேசக் கூடியவர் என்றால் கேட்கவா வேண்டும்.

கடைசி மணி ஒலித்தது.

மாணவர்கள் வீடுகளுக்குக் கலைந்து செல்லத் துவங்கினர்.

சல்மான் தனது சைக்கிளை மிதித்த வண்ணம் நண்பர்களுடன் பேசிச் சிரித்தவாறு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் அவன் மனதில் அந்த நினைப்பு இடிபோல் இறங்கியது.

'சல்மான் ஓடு... ஓடு... விரைந்து ஓடு. நேரம் குறைவாக உள்ளது' அவன் மனம் அவனை விரட்டியது.

சாட்டையடிபட்ட குதிரையைப் போல தன் நண்பர்களைப் பார்த்துத் திரும்பினான் சல்மான்.

"டேய் புகழேந்தி... ராஜா... ஆபத்து. நாம் உடனே பள்ளிக்குத் திரும்ப வேண்டும்" என்றான்.

அவன் முகத்தில் பதட்டம்.

"எங்க வீட்ல கீ போர்டு இருக்கு!"

"உனக்கு மியூசிக் தெரியுமா?"

"நான் சொன்னது, சாவிக்கொத்து மாட்டும் போர்டு!"

– கவிமணி செந்தில்



"சல்மான் என்ன விஷயம்?" ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்துக் கோரஸாகக் கேட்டனர்.

சல்மான் சொன்னான்:

"நாளை நம் பள்ளியில் இலக்கிய மன்றக் கூட்டம். அப்படித்தானே!"

"ஆமாம்டா." புதிர் இன்னும் அதிகமானது அவர்களின் முகத்தில்.

"கூட்டத்திற்கு பள்ளியின் புதிய அரங்கினைத் தயார் செய்யப் போகிறார்கள் இல்லையா?"

"ஆம். அதற்கென்ன, சீக்கிரம் சொல்லுடா." அவர்களின் முகங்களில் மேலும் குழப்பம்.

"அரங்கத்தைத் தயார் செய்வது என்றால் ஷட்டர்களை மேலே தூக்கி விடுவார்கள். அப்படித்தானே!"

'ஆம்' என்று தலையாட்டினாலும் பரபரப்பின் எல்லைக்கே சென்று விட்டார்கள்.

"அப்படி ஷட்டரை மேலே தூக்கி விடும்போது,"... என்று சொல்ல வந்தவன் அதற்குமேலும் தொடர முடியாமல் மூச்சு வாங்கினான். அவன் குரலில் பதட்டம்.

"ஷட்டர் மேலே சென்று கூண்டின் உள்ளே முழுமையாக சுருண்டு கொள்ளும். அப்பொழுது அங்குள்ள அணில் கூடு.. குட்டிகள்... ஒருவேளை தாய் அணில் இருந்தால் அதன் கதி?"

அப்பொழுதுதான் அவர்களின் உள்ளத்தில் வளர்ந்த புதிர் வெடித்துச் சிதறி மனதையும் உடலையும் குலுக்கியது.


அவனது பதட்டம் அவர்களையும் தொற்றிக் கொண்டது.

"ஐயையோ, உடனே அந்தக் குட்டிகளைக் காப்பாற்ற வேண்டுமே" என்றனர் ஒரே குரலில்.

"ஆனால்... அந்தப் பியூன் ரொம்பச் சிடு மூஞ்சியாச்சே. எல்லா வேலைகளையும் விரைந்து முடித்து விட்டு வீட்டுக்குப் போகணும்னு நிப்பாரு. நம்முடன் அவர் சரியாக ஒத்துழைக்க மாட்டார். என்ன செய்யலாம்?" என்றான் புகழேந்தி.

"நாமே தலைமை ஆசிரியரிடம் நேரடியாகச் சொன்னால் என்ன?" என்றான் ராஜா.

உடனே சைக்கிளில் அமர்ந்து அம்பைப் போல விர்ரென விரைந்து சென்றனர்.



"தாத்தா! இனிமேல் கம்ப்யூட்டர் படிச்சாதான் வேலை கிடைக்கும்."

"அப்ப நீ படிச்சா வேலை கிடைக்காதா?"

—எம். வினோத்

நல்லவேளை தலைமை ஆசிரியர் தனது அலுவலக அறையில் இருந்தார்.

மூச்சிறைக்க ஓடி வந்து நிற்கும் மாணவர்களைப் பார்த்ததும் அவர் முகத்தில் கேள்விக் குறி.

"என்ன விஷயம்?" என்றார்.

சல்மான் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கினான்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தலைமை ஆசிரியர் அம்மாணவர்களின் உயர்ந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டார்.

தானே எழுந்தார். பியூனையும் காவலாளித் தாத்தாவையும் உடன் அழைத்துச் சென்றார்.


காவலாளித் தாத்தா மரங்கள் ஏறுவதிலும் இது போன்ற விஷயங்களிலும் மிகவும் ஆர்வமும் அனுபவமும் உள்ளவர்.

மேஜைக்கு மேல் நாற்காலி போடப்பட்டது. தாத்தா மேலே ஏறினார்.

எல்லோரும் ஆவலுடன் மேலே பார்த்தனர். அவர்களின் மனதில் திக்... திக்...

தாத்தாவின் கைகள் மெலிந்தவை. எனவே இடுக்கின் ஊடே கைகள் எளிதாகச் சென்றன. முதலில் குட்டிகளை வெளியே எடுத்தார்.

"சார். கூட்டை அப்படியே எடுக்க முடியாது. பிய்த்துத்தான் எடுக்க வேண்டும்" என்றார் தாத்தா.



மிகப் பெரிய விதை!

சில சாமியார்கள் கையில் வைத்திருக்கிறார்களே திருவோடு. அதுதான் உலகிலேயே பெரிய விதையான கடல் தேங்காயின் ஓடு.

கடல் தேங்காயைத் திருவோட்டுக்காய், கடல் பனை, இரட்டைத் தேங்காய், மலாய் தீவுத் தேங்காய் என பல பெயர்களில் அழைக்கிறார்கள்.

பனை போன்ற இம்மரம் இந்துமகா சமுத்திரத்தில் பிரஸ்லின் என்னும் தீவில்தான் வளர்கின்றன. ஆண் மரத்தில் பூக்கும் பூ 2 மீட்டர் நீளம் வரை இருக்கும். பெண் மரங்கள் முளைத்து 100 ஆண்டுகள் சென்ற பிறகுதான் பூக்க ஆரம்பிக்கின்றன. காய் முற்றுவதற்கு 10 ஆண்டுகள் ஆகிறது.

இந்தக் காய் தேங்காய் மாதிரி இருக்கும். ஆனால் தேங்காயை விட பன்மடங்கு பெரியது. முற்றின காய் உதிர்ந்து கடலில் மிதந்து கரையில் ஒதுங்கும். இவை மாலத்தீவின் கரைகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

இந்தக் கடல் தேங்காயின் எடை 7 கிலோ முதல் 23 கிலோ வரை இருக்கும்.

உலகப் புகழ் பெற்ற அதிசயங்கள் என்ற நூலிலிருந்து
– க. கண்ணகி, மிட்டூர் அஞ்சல், ஆண்டியப்பனூர்.

எல்லோருக்கும் வேதனை.

தலைமை ஆசிரியர் தலையாட்டினார். தாத்தா கூட்டினைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே எடுத்தார்.

தனது கூட்டிற்கும் குட்டிகளுக்கும் ஏதோ ஆபத்து என்று தெரிந்ததும் தாய் அணில் உரத்த குரலில் கீச்சிடத் துவங்கியது.

அதன் குட்டிகளைக் காப்பாற்றவே இத்துணை முயற்சியும் என்பது அதற்குத் தெரியுமா?

குட்டிகளைப் பரிவோடு கைகளில் வாங்கினான் சல்மான். குட்டிகள் இன்னும் கண் திறக்காத நிலையில், பஞ்சு போன்ற தோலுடன்.. தொடவே பயமாக இருக்கும் அளவுக்கு மென்மையாக இருந்தன.

"தம்பிகளா... கவலைப் படாதீங்க. இந்தக் குட்டிகளுக்கு நான் வசதி செய்து கொடுக்கறேன். தாய் வந்து போகும் அளவுக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார் தாத்தா ஆறுதலாக.

மாணவர்கள் நன்றியோடு அவரைப் பார்த்தனர்.

தலைமை ஆசிரியர் சல்மானையும் அவனது நண்பர்களையும் தட்டிக் கொடுத்தார்.

"அணில் குட்டிகளைக் காப்பாற்ற நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டத் தக்கது. பிற உயிரினங்களின் மீது அன்பும் பரிவும் காட்ட வேண்டும் என்ற உயரிய பண்பினை நீங்கள் உங்கள் செயல்கள் மூலம் காட்டி விட்டீர்கள். இந்த நிகழ்ச்சி பற்றி நாளை வழிபாட்டுக் கூட்டத்தில் விளக்கி மற்ற மாணவர்களும் இத்தகைய உணர்வுகளைப் பெற ஆலோசனை கூற விரும்புகிறேன்" என்றார்.

அன்றிலிருந்து வகுப்பறைப் பக்கம் அணில் எட்டிப் பார்த்தால் போதும். சல்மானும், மாணவர்களும் படை திரண்டு அதனை விரட்டிவிடுவர்.

அருகில் உள்ள கொடுக்காய்ப் புளி மரத்தின் கிளைகளிலும் பாதி மடல் விரிந்த தென்னங் குருத்தின் ஊடேயும் அவைகள் கூடு கட்டியிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவர்.

முதலை கண்ணீர் விடுகிறதா?

எஸ். சுஜாதா

பொதுவாக உயிரினங்கள் பெரும்பாலும் ஒவ்வொரு கால கட்டத்திலும் பரிணாம வளர்ச்சி அடைந்து பல்வேறு மாறுதல்களுக்குட்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் பூமியில் தோன்றி பலகோடி வருடங்களுக்குப் பின்பும் அதிக மாற்றங்கள் ஏற்படாமல் வாழும் உயிரினம் முதலைதான்!

முதலைகள் நீரில் வாழக் கூடிய ஊர்வன வகை பிராணி. வெப்ப மண்டல பிரதேசங்களில் உள்ள ஆறுகள், ஏரிகள், சதுப்பு நிலங்கள், ஆற்றுக்கழி முகங்களில் இவை வாழ்கின்றன.


இவற்றின் முகம் நீண்டிருக்கும். பெரிய வாய். அவற்றுள் கூர்மையான பற்கள் இருக்கின்றன. கண்களும், மூக்குத் துளைகளும் தலையின் மேல் பாகத்தில் அமைந்துள்ளன. மூக்குத் துளைகள், காதுகளின் மீது மெல்லிய தோல் மடிப்புகள் உள்ளன. இவற்றை இறுக மூடி மூக்கு, செவிகளில் நீர் புகாதபடி பார்த்துக் கொள்கின்றன முதலைகள்.

இது நீர் வாழ் பிராணி என்றாலும் மீனைப் போன்று நீருக்குள்ளேயே மூச்சு விட இயலாது. மூச்சு விடுவதற்காக இவை அடிக்கடி மேலே வருகின்றன.

முதலையின் கண்களிலும் இமைகளைத் தவிர ஒரு படலம் ஒன்று உள்ளது. இது தண்ணீருக்குள் முதலை செல்லும் போது மூடிக் கொள்கிறது.







பாசாங்கு செய்பவர்களைப் பார்த்து 'முதலைக் கண்ணீர்' விடாதே என்று கூறுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். உண்மையிலேயே முதலைகள் கண்ணீர் விடுகின்றனவா? இல்லை! முதலைகள் சாப்பிடும் உணவிலும் பருகும் நீரிலும் உள்ள அதிகப்படியான சத்துகள் கண்களுக்கு அருகே உள்ள உறுப்பின் மூலம் நீராக வெளியேறுகின்றன.

முதலையின் தோல், முட்கள் போன்ற கடினமான எலும்பு செதில்களால் ஆனது. [illegible]றுள்ள வால், உடலின் நீளத்தில் பாதி இருக்கும். அகலமான, தட்டையான வாலின் உதவியால் முதலைகள் நன்றாக நீந்துகின்றன. இந்த வாலின் உதவியால் எதிரியைத் தாக்கவும் இரையைப் பிடிக்கவும் முடிகிறது.


கால்களும் நீந்துவதற்கு உதவுகின்றன. முன்னங்கால்களில் ஐந்து விரல்களும் பின்னங்கால்களில் நான்கு விரல்களும் இருக்கின்றன.

முதலைக்குக் கூர்மையான பார்வையும் சிறிய ஒலியையும் கேட்டு உணரக் கூடிய செவியும் உண்டு.

நீரில் நீந்திச் செல்லும் பறவைகள், மீன்கள், பூச்சிகள், தலைப் பிரட்டைகள் போன்றவற்றை முதலைக் குஞ்சுகள் உண்ணுகின்றன. நீர் குடிக்கச் செல்லும் ஆடு, மாடு, எருமை, வரிக்குதிரை போன்ற பிராணிகளைப் பெரிய முதலைகள் சாப்பிடுகின்றன. சில சமயங்களில் கரையேறி வந்தும் இரையைப் பிடித்துச் சென்று விடுவதுண்டு. சில முதலைகள் மனிதர்களையும் விட்டு வைப்பதில்லை. உணவுடன் கற்களையும் விழுங்குகின்றன முதலைகள். இந்தக் கற்கள் உணவு அரைபடவும் ஜீரணிக்கவும் உதவுகிறது.

ஆணும் பெண்ணும் தண்ணீரிலேயே குடும்பம் நடத்துகின்றன. பெண் முதலை முட்டையிடும் பருவத்தில் இரவு நேரங்களில் கரைக்கு வந்து உயரமான மணல் மேடுகளில் தன் பின்னங்கால்களால் 40 செ.மீ. ஆழமுள்ள குழியைத் தோண்டும். இக்குழியில் இருபதிலிருந்து எண்பது முட்டைகள் வரை இடும். பிறகு முட்டைகளின் மேல் மண்ணைப் போட்டு மூடிவிடும்.

முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவர



மூன்று மாதங்களாகும். மூன்று மாதம் வரை முட்டைகளுக்கு அருகிலேயே இருந்து காவல் காக்கும் பெண் முதலை.

முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளி வந்தவுடன் தாய் முதலை அவற்றை கவ்விக் கொண்டு நீருக்குள் விடும். இளம் முதலைகள் முதல் மூன்று, நான்கு வருடங்கள் கரைகளில் குழி தோண்டி அதிலேயே வசிக்கின்றன. நடுநடுவே தண்ணீருக்குள் செல்வதும் உண்டு.

வெப்பமான நாட்களில் முதலைகள் கூட்டமாக கரைக்கு வந்து ஒதுங்குகின்றன. வெப்பம் அதிகரிக்க, அதிகரிக்க அசையாமல் படுத்தபடி வாயைத் திறந்து அதிகப் படியான வெப்பத்தை வெளியேற்றுகின்றன. இந்த மாதிரி 'சன் பாத்' எடுப்பது என்றால் முதலைகளுக்கு அலாதியான விருப்பம். இப்படி ஓய்வெடுக்கும் நேரங்களில் ஆபத்தான சிறு ஒலி கேட்டாலும் வேகமாகத் தண்ணீருக்குள் சென்று விடுகின்றன.

முதலைகளில் பல வகைகள் உண்டு. ஒவ்வொன்றும் பச்சை, சாம்பல், பிரௌன் என பல நிறங்களில் காணப்படுகின்றன.

கங்கை, பிரம்மபுத்திரா, சிந்து முதலிய ஆறுகளில் வாழும் முதலைகளின் முகம் குறுகி நீண்டிருக்கும். இரு தாடைகளிலும் வரிசையாகப் பற்களிருக்கும். இம்முதலை பெரும்பாலும் மீன்களையே முக்கிய உணவாகக் கொள்கிறது.

குரோக்கடைல் மற்றும் அலிகேட்டர் முதலைகளுக்கு இடையே உள்ள வேறுபாடு என்ன தெரியுமா?


குரோக்கடைல் முதலைகளின் கீழ் தாடையில் உள்ள நான்காவது பல் மேல் தாடையில் உள்ள ஒரு பள்ளத்தில் சென்று பொருந்தும். இது வெளியே தெரியும்.

அலிகேட்டர் முதலைகளின் கீழ் தாடையில் உள்ள நான்காவது பல் மேல் தாடையிலுள்ள குழியில் பொருந்தும். ஆனால் வெளியே தெரியாது.

பொதுவாக முதலைகள் எண்பது ஆண்டுகள் வரை உயிரோடு வாழக்கூடியவை. ஆனால் மிருகக் காட்சி சாலைகளில் வளர்க்கப்படும் முதலைகள் முப்பது ஆண்டுகளே உயிர் வாழ்கின்றன.

முதலையின் தோலிலிருந்து அழகிய கைப்பைகள், வார் பட்டைகள், காலணிகள் செய்யப்படுகின்றன. முதலையிலிருந்து ஒரு வித வாசனைப் பொருளும் எடுக்கப் படுகிறது. இக்காரணங்களால் முதலைகள் வேட்டையாடப்பட்டு வருகின்றன.

ஜூலை இதழில் 'வண்ணத்துப் பூச்சி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



முதல் பரிசு

எஸ். ஜோதி,
ஏழாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
மேல்பட்டி.

இரண்டாம் பரிசு



ஜெ. லாவண்யா,
வேலூர்,



மூன்றாம் பரிசு

ஆர். அனிதா
ஆண்டாங்கோயில்,
கரூர் மாவட்டம்.


ஓவியப் போட்டி

முடிவுகள்



ஆறுதல் பரிசு

த. மதன்குமார்,
பத்தாம் வகுப்பு,
ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளி,
அலமேலு மங்கா புரம்.





ஆறுதல் பரிசு

நா. ராதா,
எட்டாம் வகுப்பு,
ராணி மெய்யம்மைப் பள்ளி,
புலியூர்.

தேசம் காக்கும் வீரர்கள்!

எல்லையிலே சண்டை இன்று
ஏன் நடக்குது தெரியுமா?
தொல்லை தரும் அண்டைநாட்டுத்
துரோகம் உனக்குப் புரியுமா?

தேசம் என்ற வீட்டுக்குள்ளே
திருட்டுப்பூனை நுழைந்தது
நேசமில்லா நெஞ்சுக்குள்ளே
நிறைய வன்மம் சேர்த்தது.

பனிமலையில் பதுங்கிநின்று
பாய நினைத்த திருடர்கள்
இனிய தேசம் இந்தியாவைக்
கவர நினைத்த கயவர்கள்



வீரம் கொண்ட ராணுவத்தின்
கோபம் பொங்கி வெடித்தது
போர் நடக்கும் பூமியினில்
பெரிய வெற்றி கிடைத்தது!

தேசம் காக்கும் ராணுவம் நம்
தெய்வமன்றோ சகோதரா!
நேசம்கொண்டு தேச சேவை
நிதமும் செய்ய நீ நினை!

— ஜிண்டு

முயல் வரையுங்கள்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் முயல் உருவாகி விடும். ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!

முதல் காது M1 → L2 →L4 → N6→ N3→M1

இரண்டாவது காது: N5→ O3→ Q2→ Q4→O5

தலை:N5→P5→R7→R8→P10→O10→M9


உடல் மற்றும் பின் கால்: M5 →L8→L9→ J11→ E19→ E21 → G24→ P24→ O23→ L23→M22→M19→I 18→ K18→ J19

முன்புற உடல்; இரண்டாவது கால் M19→O16→O19→ N18→N17

மூன்றாவது கால் : L13 → M15→O16→ Q18→ R18→ Q16→ O15→ O14→ N12

உடலின் இதர பாகங்கள் : O15→P13→P10

வால் : E21 → D21→D22→ E23→F23



நன்றி: லிட்டில் ஆர்க்

10. சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!


அமைப்பு: விஜி   படம்: லலிதா




ஒரு தீவை அடைந்தனர்.
எல்லாவித ஆபத்துகளில் இருந்தும் தப்பித்து விட்டோம்.
ஆமாம்! ரொம்ப நிம்மதியா இருக்கு.
இருட்டி விட்டது. அந்த மரத்தடியில் படுத்துக் கொள்ளலாம்.
காலையில் அடுத்த திட்டத்தை யோசிப்போம்.
காலையில் கண் விழித்தபோது—
ஐயோ! அங்கே பாருங்கள்.
மலைப் பாம்பு! என்ன செய்யப் போறோம்?



பயந்தபடி நாட்களைக் கடத்தினர். ஒருநாள்—
அதோ ஒரு கப்பல் வருகிறது. நமக்கிருக்கும் ஒரே வழி அதில் செல்வதுதான்!
மரக்கிளையை வெட்டி சைகை காட்டலாம்.
கப்பல் தீவுக்கு வந்தது.
நீங்கள் எப்படி இந்தத் தீவுக்கு வந்தீர்கள்?
சூறாவளிக் காற்றால் கப்பல் திசை மாறிவிட்டது.
எங்களில் பாதிப் பேர் அரக்கனிடமும் இன்னும் சிலர் பாம்புகளிடமும் மடிந்து விட்டனர்.
உங்கள் கதை என்னை மிகவும் பாதித்துவிட்டது.


நான்கூட ஒரு நண்பனை ருக் பறவைத் தீவில் இழந்து விட்டேன்.
ருக் பறவைத் தீவில் தொலைந்தது நான்தான்! என் பெயர் சிந்துபாத்.
இப்போது தான் அடையாளம் தெரிகிறது. நீ விட்டுச் சென்ற சரக்குகளை பத்திரமாய் வைத்திருக்கிறேன், எடுத்துக் கொள்.
நன்றி நண்பா.
வெவ்வேறு இடங்களில் வியாபாரம் செய்து விட்டுப் பெரும் செல்வத்துடன் பாக்தாத் திரும்பினான் சிந்துபாத்.
(தொடரும்)


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31
32
33
34
35
36
37
38
39

குளத்தங்கரை வீடு!





இந்த விளையாட்டிற்கு குறைந்தது இரண்டு பேர் தேவை. அதிகபட்சம் நான்கு பேர் வரை விளையாடலாம்!

- பகடையை வைத்து விளையாட வேண்டும்.
- ஒவ்வொருவரும் வெவ்வேறு வண்ணப் பொத்தான்களைப் பயன்படுத்த வேண்டும்.
- தடைகளைத் தாண்டி முதலில் குளத்தங்கரை வீட்டை அடைபவரே வெற்றி பெற்றவர்.



விதிமுறை :

எண் 4 – பட்டாம் பூச்சியின் உதவியால் 12–ஆம் எண்ணுக்குச் செல்லவும்.

எண் 5 – எலியாரின் வளை குறுக்கிடுகிறது. மீண்டும் முதல் எண்ணுக்குச் செல்லுங்கள்.

எண் 7 – நண்பரின் உதவியால் 18-க்குச் செல்லுங்கள்.

எண் 8 – ஒரு ஆள் விரட்டுகிறார். எண் 6க்குத் திரும்பிச் செல்லவும்.





எண் 14 – ஓய்விடம். 3 போட்டால்தான் மீண்டும் ஆட்டம்.

எண் 20 – முட்களில் மாட்டிக் கொண்டதால் தாமதம்; ஓர் ஆட்டம் இழக்கவும்.

எண் 21 – காவலர்கள் உதவியால் எண் 25-க்குச் செல்லவும்.

எண் 23 – நண்பரின் முதுகில் ஏறி 26க்குச் செல்லவும்.

எண் 27 – தவறான பாதை. மீண்டும் எண் 19-க்குச் செல்லவும்.

எண் 30 – மரம் தடுக்கிறது. 2 போட்டால் மட்டுமே ஆட்டம் தொடரலாம்.

எண் 31 – எலியாரின் வளை குறுக்கிடுகிறது. மீண்டும் 16-க்குத் திரும்புங்கள்.

எண் 35 – அதிர்ஷ்டம்! 37க்குச் செல்லுங்கள்.

எண் 38 – எலியாரின் வளை மீண்டும் குறுக்கிடுகிறது. எனவே 15–க்குச் செல்லுங்கள்.



படம், தொகுப்பு : **தமிழ்**

புதருக்குள் மர்மம்!

எஸ். சங்கர்

பாபு வீசிய பந்து ராமுவின் மட்டையோடு மோதி படுவேகமாக மேலே பறந்து மைதானத்தைத் தாண்டிப் போய் விழுந்தது.

'சிக்ஸர்' என்று ஆட்டக்காரர்கள், பார்வையாளர்கள் அனைவருமே ஒரே குரலில் கத்தினர்.

சிறுவர் போட்ட கும்மாளம் மைதானத்தின் ஓரத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த நாயை எழுந்து ஓடச் செய்தது.

பந்தைப் பிடிக்க ஓடித் தவற விட்ட சிவா பந்துக்குப் பின்னாடியே ஓடினான். பந்து மைதானத்தைக் கடந்து, அருகிலிருந்த புதரில் போய் ஒளிந்து கொண்டது.

சிவா பந்தைத் தேட ஆரம்பித்தான்.

செடி கொடிகளை நீக்கிப் பார்த்தான். பந்து தென்படவில்லை.

ஆனால்...

ஏதோ சிவப்பும், நீலமும் கொண்ட வண்ணக் காகிதங்களால் சுற்றப்பட்ட அட்டைப் பெட்டியொன்று அவன் கண்ணில்பட்டது.

தொடலாமென்று குனிந்த சிவா, சட்டென்று நின்று விட்டான். போனவாரம் அவனுடைய மாமா செய்தித் தாளில் படித்துச் சொன்ன விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. 'கேட்பாரற்று கிடந்த ஒரு வண்ணப் பெட்டியிலிருந்து குண்டு வெடித்தது!

சிவாவுக்கு உடல் நடுங்க ஆரம்பித்தது. பயத்தால் அவனது கால்கள் உதறின. திரும்பினான். வேகமாக வந்த திசையிலேயே ஓடினான்.

கையில் பந்து இல்லாமல் கலவரமடைந்த முகத்தோடு ஓடிவரும் சிவாவை அதிர்ச்சியோடு பார்த்தான் பிரபு.

ஓடி வந்த சிவா, பிரபு மேல் மோதித் தடுமாறித் தரையில் விழுந்தான்.

அவனருகில் உட்கார்ந்த பிரபு, சிவாவின் தலையைத் தூக்கித் தன் மடிமீது போட்டுக் கொண்டான்.

அங்குள்ள அத்தனை பேரும் ஓடி வந்து இருவரையும் சூழ்ந்து கொண்டனர்.

அதற்குள், சிவா, "பாம்... பாம்... பாம்..." என்று விடாமல், தான் பந்தெடுக்கப் போன புதரைக் காட்டியபடி சொன்னான்.

பிரபு புரிந்துகொண்டான். "பந்தெடுக்கப் போன இடத்தில் பாம்பு ஏதோ இவன் கண்ணில் பட்டிருக்கும். பயந்துபோய் இவன் உளறுகிறான். கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுத்தால் தெளிந்து விடுவான்" என்று எல்லோருக்கும் விளக்கினான்.

பயத்தில், பாம்பு என்று சொல்ல வராமல் 'பாம்... பாம்...' என்று சிவா உளறுவதாக நினைத்து எல்லா சிறுவர்களும் திருப்தியடைந்தவர்களாய் நிற்க, ஒரு பாட்டிலிலிருந்து தண்ணீரை எடுத்து அவனுக்குக் குடிக்கக் கொடுத்தான் பாபு.

அதற்குள் ரமேஷும், கோபாலும் அருகில் கிடந்த இரண்டு நீண்ட குச்சிகளை எடுத்துக்கொண்டு பாம்பு இருக்கும் இடத்துக்குப் போக ஆரம்பித்தனர்.

தண்ணீரைக் குடித்தவுடன் எழுந்து உட்கார்ந்த சிவா, "டேய், அங்கே போகாதீங்கடா, புதரில் 'பாம்' இருக்குது; வெடிக்கப் போகுதுடா" என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்தான்.

அவ்வளவுதான். எல்லா சிறுவர்களும் எழுந்து நின்றனர்.

புதரை நெருங்கப் போன ரமேஷும், கோபாலும் குச்சியைப் போட்டுவிட்டு அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

எல்லோருமே மைதானத்தை விட்டு வெளியேற எண்ணி ஓடத் தொடங்கினர்.

சிவாவும் பிரபுவின் கையைப் பிடித்துக் கொண்டு ஓடினான்.

சிறுவர்கள் மைதானத்தை விட்டு வெளியேறி மறுபக்கத்தில் போய்ச் சேர்ந்தனர்.

புதரையே பார்த்தபடி நின்றனர்.

கோபால் தன்னுடைய அப்பாவிடம் செய்தியைச் சொல்ல ஓடினான். அவனுடைய அப்பா பரந்தாமன் ஒரு போலீஸ்காரர்.

செய்தியை அறிந்தவுடன் பரந்தாமன் பக்கத்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் 'போன்' செய்தார். அடுத்த பத்தாவது நிமிடம், இரண்டு கான்ஸ்டபின்களுடன் மைதானத் துக்கு வந்து சேர்ந்தார்.

சிறுவர்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு மூவரும் புதரை நோக்கி நடந்தனர்.

புதரை நெருங்கும் நேரம்...

மூவரையும் திகைக்க வைக்கும்படி ஒருவன் புதரிலிருந்து எழுந்து ஓடினான். அவன் கையில் ஒரு அட்டைப்பெட்டி பார்சல் இருந்தது.

''அதோ அந்தப் பெட்டிதான்'' என்று கத்தினான் சிவா.

''வெடிக்கப் போகுது, எல்லோரும் காதை மூடிக் கொள்ளுங்கள்'' என்றான் கோபால்.

பரந்தாமன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஓடியவனைத் துரத்திப் பிடித்தார். அடுத்தகணமே அவன் கையில் இருந்த பெட்டியைப் பிடுங்கித் தூரமாக வீசியெறிந்தார்.

எந்த வினாடியும் வெடிச்சத்தம் கேட்கும் என்ற எதிர்பார்ப்போடு கலந்த அச்சத்தில் சுற்றி நின்ற அனைவரும் காதை மூடிக் கொண்டனர்.

பரந்தாமனும் போலீஸ்காரர்களும்கூட...

புதிய மனிதன் எல்லோரையும் வியப் போடு பார்த்தான். ஏதோ வெடிக்கப் போகிறது என்பதை அறிந்து அவனும் தப்பி ஓட முயலாமல் காதை மூடிக்கொண்டு நின்றான்.

இரண்டு... மூன்று நிமிடங்கள் ஓடின. எதுவுமே வெடிக்கவில்லை.

பரந்தாமன் மெதுவாகத் திரும்பி பெட்டியோடு ஓடியவனைப் பிடித்து ''என்ன வைத்திருக்கிறாய்; எப்போது வெடிக்கும்? உதை வாங்காமல் சொல்லி விடு!'' என்றார்.

அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.


சிரித்தபடி ''ஐயா! என்ன இது? ஜவுளிக் கடை பெட்டியைப் போய் வெடிகுண்டுப் பெட்டியா நினைச்சிட்டீங்களா? இது வெடிக்காது. உள்ளே புடவைதான் இருக்குது'' என்றான்.

முதல்நாள் மாலை பக்கத்து ஜவுளிக் கடையில் திருடிய புடைவையை அதற்குரிய பெட்டியுடன் அவன் புதரில் ஒளித்து வைத்திருக்கிறான். பின்னர் எடுக்க வந்தபோது சிறுவர்கள் போட்ட கூச்சலில் மீண்டும் ஒளிந்து கொண்டிருக்கிறான். போலீஸ்காரர்கள் புதரை நோக்கி வரவே, தன்னைத்தான் கைது பண்ண வருகிறார்களோ என்று பயந்து ஓடியவனைத் தான் பிடித்திருக்கிறோம் என்பதை பரந்தாமன் அவனிடமிருந்து தெரிந்து கொண்டார்.

ஒரு கையில் அவனையும், மறு கையில் அட்டைப் பெட்டியையும் பற்றியபடி ஒரு திருடனைப் பிடித்துவிட்ட பெருமிதத்தோடு பரந்தாமன் நடக்க, போலீஸ்காரர்கள் பின் தொடர்ந்தனர்.







சிலந்தி வலை

சிலந்தியின் வயிற்றிலுள்ள சுரப்பிகள் ஒருவித திரவத்தைச் சுரக்கின்றன. இந்தத் திரவத்தைக் கொண்டு மிக மெல்லிய நூலை நூற்கிறது சிலந்தி. இந்த நூல் காற்றில் இறுகி உறுதியாக இருக்கும். இந் நூலால் வலையை அழகாகப் பின்னுகிறது. வலை பின்னி முடித்ததும் வலையின் அடியிலோ அல்லது அருகிலோ மறைந்து இருக்கும் சிலந்தி. ஏதாவது பூச்சிப் பறந்து வந்து வலையில் மாட்டிக் கொண்டால் வேகமாக வந்து பிடித்துவிடும். வலையிலுள்ள நூல் பசை போல் இருப்பதால் பூச்சி ஒட்டிக் கொள்ளும்.



பூச்சிகள்


தேனீ மற்றும் குளவிகளின் உணவு?

தேனீக்கள் பூக்களில் உள்ள மகரந்தத்தை உணவாக்கிக் கொள்கின்றன. மீதி உணவையும் சேமிக்கின்றன. இதுவே பின்பு தேனாக மாறுகிறது. குளவிகள் பிற பூச்சிகளைக் கொன்று உணவாக்கிக் கொள்கின்றன.



பெரிய பூச்சி!

ஆப்பிரிக்காவில் வாழும் கோலியத் வண்டுதான் பூச்சிகளிலேயே மிகவும் பெரியது. இவை 12 செ.மீ. நீளம் வரை வளரக்கூடியவை. 110 கிராம் எடை கொண்டவை. மிகச் சிறிய பூச்சி பாராசிட்டிக் குளவிதான். இது 0.2 மி.மீ நீளமும் 0.006 கிராம் எடையும் கொண்டது.




வண்ணத்துப் பூச்சியின் வாழ்க்கை இலைகளின் மேல் இட்ட முட்டையிலிருந்து துவங்குகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் லார்வா (கம்பளிப் பூச்சி) இலைகளை வேகமாகத் தின்று விரைவில் வளர்கிறது. இந்தக் கம்பளிப் பூச்சி முதிர்ச்சியடைந்த பின் தன்னைச் சுற்றிக் கூட்டை உருவாக்கிக் கொள்கிறது. இந்த நிலை பியூப்பா பருவம் ஆகும். சில வாரங்களில் பியூப்பா கூட்டை உடைத்துக் கொண்டு முழுமையான கண்கவர் வண்ணத்துப் பூச்சியாக வெளிவருகிறது.

வெட்டுக்கிளிகளின் பாட்டு!

வெட்டுக்கிளிகளும் பச்சை மற்றும் பிரௌன் வண்ணத்தில் காணப்படுகின்றன. இவற்றிற்கு 6 கால்கள் உண்டு. முன்னங்கால்கள் இரண்டும் மிகச் சிறியது. நடுவில் இருக்கும் கால்கள் சற்றுப் பெரியது. பின்னங்கால்கள் இரண்டும் மிகப் பெரியது. இந்தப் பின்னங்கால்களின் உதவியால்தான் வெட்டுக்கிளிகள் வெகு தூரத்திற்குத் தாவுகின்றன. இவைகளுக்கு நான்கு இறக்கைகளும் உண்டு. இந்த இறக்கைகள் ஒன்றுடன் ஒன்று உராயும் போதும் கால்களுடன் உரசும் போதும் சத்தம் வரும். இதைத்தான் வெட்டுக்கிளி பாடுகிறது என்கிறார்கள். ஆண் வெட்டுக்கிளிகள் பெண்களைக் கவரவே இவ்வாறு பாடுகின்றன.



குச்சிப் பூச்சி

குச்சிப் பூச்சி நீளமான மெல்லிய உடல் அமைப்புக் கொண்ட உயிரினம்.



பச்சை மற்றும் பிரௌன் வண்ணங்களில் காணப்படும். மரத்திலோ, இலையின் மீதோ பூச்சி அமர்ந்திருந்தால் சட்டென நம்மால் அடையாளம் காண முடியாது. இதன் காரணமாகவே தன் எதிரிகளான பறவைகள் மற்றும் பல்லிகளிடமிருந்து குச்சிப் பூச்சி தப்பி விடுகிறது.

கேட்கட்டுமா டாக்டர்?

● க. பிரஸாத், திருவானைக்கோவில்.

? டாக்டர், சிலருக்கு வர்ணப் பற்கள் வரக் காரணம் என்ன?

! சாதாரணமாக, நம் பற்களின் நிறம் பால் வெண்மையிலிருந்து பழுப்பு நிறம் வரை இருக்கலாம் என்பதை நீ அறிவாய்தானே! சிலருக்குப் பற்களின் மேற்பகுதியில் சில பொருட்கள் படிந்து வினைபுரியும் போது பற்கள் நிறம் மாறும். இதற்கு 'வெளி நிற மாற்றம்' என்று பெயர். அதாவது, பாக்டீரியாக்கள் பாதித்தால் பச்சை நிறம்; இரும்புச்சத்துக் குறைந்தால் கறுப்பு நிறம்; சுத்தம் தவறினால் மஞ்சள் நிறம்; புகை பிடித்தால் அல்லது புகையிலை போட்டால் காவி நிறம்; செம்பு, நிக்கல், தங்கம், இரும்பு, ஈயம் போன்ற உலோகங்கள் தயாரிக்கும் தொழிலாளிகளுக்கு முறையே கறுப்பு, பச்சை அல்லது கறுப்பு, மஞ்சள் நிறப் பற்கள் காணப்படும். அதே சமயத்தில் ஒரு சிலருக்குப் பற்களின் வளர்ச்சிப் பருவத்தில் நிகழ்கின்ற சில மாற்றங்களால் பல் முழுவதுமே நிறம் மாறி விடும். இதற்கு 'உள் நிறமாற்றம்' என்று பெயர். பரம்பரை அம்சம், ஃப்ளோரைடு சத்து மிகுதியாவது, ரத்தத்தில் உண்டாகும் மாற்றங்கள், கர்ப்பிணிகள் உட்கொள்ளும் டெட்ராசைக்ளின் மாத்திரை போன்றவை உள்நிறமாற்றத்திற்கு வழிவகுக்கும்.

● கே.எம்.பி. வைஜீர்நிஸா, லெக்ஷ்மாங்குடி.


? டாக்டர், வயிற்றில் சில சமயங்களில் இரைச்சல் கேட்கிறதே, ஏன்?

! புரதச்சத்து நிறைந்த பருப்பு, பயறு, பால், முட்டை மற்றும் மாவுச்சத்து மிகுந்த உருளைக்கிழங்கு, வாழைக்காய் போன்ற உணவுகளைத் தேவைக்கு மேல் உண்ணும்போது இவை உணவுப் பாதையில் வாயுவை உற்பத்தி செய்யும். குடலில், திரவ நிலையில் உள்ள உணவுடன் இந்த வாயு பயணம் செய்யும்போது குமிழ்களாக உருவாவதால் வயிற்றில் இரைச்சல் கேட்கும். மேலும், வயிற்றுப்போக்கு, சீதபேதி, காலரா, குடல் காசநோய், இரைப்பைப்புண், அஜீரணம், உளவியல் கோளாறுகள் காரணமாக குடலின் அசைவுகள் அதிகமாகும் போதும் வயிற்றில் இரைச்சல் ஏற்படும்.


● எஸ். பாலாஜி, திருவள்ளூர்.

? டாக்டர், எனக்கு அடிக்கடி மூச்சு வாங்குகிறது. சிறிது தூரம் நடந்தாலே மூச்சு வாங்குகிறது. என்ன காரணம்? தீர்வு என்ன?

! மூச்சு வாங்குவதற்குப் பல காரணங்கள் உண்டு, பாலாஜி. குறிப்பாகச் சொல்லப் போனால் இதயம், நுரையீரல், சிறுநீரகம், கல்லீரல், ரத்தம் தொடர்பான குறைபாடு அல்லது பாதிப்பு இருந்தால் மூச்சு வாங்கும். நடந்தாலே மூச்சு வாங்குவது என்பது நோயின் தீவிரத்தை உணர்த்துகிறது. ஆகவே, உடனடியாக உன் குடும்ப மருத்துவரை அணுகி, உன் சிரமத்திற்கான காரணத்தைத் தெரிந்து கொள். அதற்கேற்ப உனக்கு சிகிச்சை கிடைத்து விடும். நோய் தீரும்.









வயிற்றில் இரைச்சல் ஏற்படுவது ஏன்?

டாக்டர். கு. கணேசன்




● எம். எஸ். ஜாஸ்மின், நத்தம்.

? டாக்டர், எங்கள் பக்கத்து வீட்டுப் பையனுக்கு மூக்கில் சதை வளர்ந்துள்ளது. சனி வடிந்து கொண்டேயிருக்கிறது. மூக்கில் சதை இருந்தால் சனி பிடிக்குமா?

! சந்தேகமென்ன ஜாஸ்மின்? மூக்கில் சதை வளர்ந்தால் அதில் நுண் கிருமிகள் தொற்றுவதற்கு அதிக வாய்ப்பு உண்டாகும். கிருமிகள் புகுந்தால் சளி பிடிக்கவும் வழி கிடைக்குமல்லவா? இதுதான் காரணம்.





● ஆர்.வி. மயில்வாகனன், மதுரை – 19.

? நாம் இரவில் தூங்கும் போது நமது மூளை ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்தானே! அப்படியானால் உறக்கத்தில் நாம் அடிக்கடி புரண்டு படுக்கிறோமே, எப்படி டாக்டர்?

! உறக்கத்தில் புரண்டு படுப்பது 'அனிச்சைச் செயல்' மாதிரி. அதாவது, இந்த மாதிரி செயல்களுக்கு மூளை கட்டளையிடுவதில்லை. முதுகுத் தண்டுவடத்திலிருந்து ஆணை வரும். அதன்படி நமது உடல் உறுப்புகள் நடந்து கொள்ளும். உறக்கத்தின் போது கொசு கடித்தால் கடித்த இடத்தை சொரிந்து கொள்கிறோமே. அதுவும் இதுபோன்ற ஓர் அனிச்சைச் செயல்தான். ஆகையால், மூளை ஓய்வெடுக்கும் போது கூட அனிச்சைச் செயல்கள் நடக்கலாம் என்பதைத் தெரிந்து கொள், மயில்வாகனன்!

● க. துளசிராமன், கடம்பர வாழ்க்கை.

? அரிசியைச் சாதமாக நாம் உபயோகிக்கிறோம். ஆனால் அதே அரிசியை, வெறுமனே தின்றால் ரத்த சோகை வரும் என்கிறார்கள். இது எவ்வாறு சாத்தியம்? விளக்கம் தேவை, டாக்டர்!

! வெறும் அரிசியை மட்டும் அடிக்கடி சாப்பிட்டால் பசி குறைந்து விடும்; மற்ற சத்துள்ள உணவுகளைச் சாப்பிட இயலாது. அரிசியில் கார்போஹைட்ரேட் எனப்படுகின்ற மாவுச்சத்து மட்டுமே உள்ளது. ஆகையால், பிற சத்துகள் உடலில் சேரும் வாய்ப்பு குறையும். இதனால்தான் அரிசியை வெறுமனே சாப்பிடும் பழக்கமுள்ளவர்களுக்கு ரத்தசோகை, புரதச் சத்துக் குறைவு, வைட்டமின் சத்துக் குறைவு போன்றவை ஏற்படுகின்றன. அதே நேரத்தில் அரிசியைச் சாதமாக வடித்துச் சாப்பிடும்போது, குழம்பு மற்றும் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்கிறோம். அவற்றின் மூலம் மாவு, புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாதுக்கள் என்று எல்லா சத்துகளும் நமக்குக் கிடைத்துவிடும். சத்துக் குறைவுக்கு இடமில்லாமல் போகும்.

3. ரங்குடு அறிமுகம்

புத்தகக் கடையின் உதவியாளர், அரங்க நாதனைக் காண்பதற்காக, ஜெயராஜ் வந்திருப்பதாகக் கூறியதும் - நித்யாவுக்கும் சத்யாவுக்கும் மூச்சே நின்று விடும் போலா யிற்று. பயத்தினால் நித்யா, சத்யாவின் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

அரங்கநாதனின் முகம் இருண்டதானாலும், சட்டென்று சுதாரித்துக் கொண்டவர், கடை அசிஸ்டெண்டிடம், "ஜெயராஜை உட்காரச் சொல். ஒரு நிமிஷத்தில் வருகிறேன்" என்று கூறினார். அவனை அனுப்பி விட்டு பரபரப்புடன் செயல் படலானார். அந்த அறையின் ஒரு பகுதியில் தாழ்வாக திட்டி வாசல் போல, ஒரு சிறிய கதவு (தடுப்பு) இருந்தது. அதன் அருகே குழந்தைகள் இருவரையும் கூட்டிப் போனார் அரங்கநாதன். அந்தத் தடுப்பைக் காலால் தள்ள, அது உட்பக்கமாகத் திறந்து கொண்டது.

"இந்தக் கடையின் பேஸ்மெண்டில் புத்தகங்களைப் பார்ஸல் செய்யும் பகுதி இருக்கிறது. இதில் நுழைந்து சரிவில் உட்கார்ந்து உந்துங்கள். சறுக்குப்பலகை போல உங்களைத் தளப் பகுதிக்குக் கொண்டு விடும இது. அங்கு புத்தகப் பண்டில் களிடையே ஒளிந்து கொண்டிருங்கள். நான் ஜெயராஜை அனுப்பி விட்டு உங்களிடம் வருகிறேன். கீழே உட்கார்ந்து குனிந்தபடி இதனுள் நுழைந்து... சீக்கிரம்...!" தள்ளாத குறையாக நித்யாவையும் சத்யாவையும் தடுப்புச் சரிவுப் பாதைக்குள். தள்ளி விட்டு ஏதுமே நிகழாதது போனற முகத்துடன் ஆபீஸ் அறைக் கதவைத் திறந்துகொண்டு ஹாலுக்கு வந்தார் அரங்கநாதன்.

வழுவழுப்பான சறுக்குப் பலகையில் சிரமமின்றிச் சறுக்கியபடி புத்தகக் குவியல்களில் போய் விழுந்தார்கள் நித்யாவும் சத்யாவும். அவர்களைத் தொடர்ந்து, அவர்களுடைய டிராவல் பாக்குகளும் அவர்கள் மீது வந்து விழுந்தன.

புத்தகங்களுக்குப் பதில் இரு குழந்தைகள் வந்து விழுவதைக் கண்ட பண்டில் கட்டும் பணியாளர்கள் முதலில்



தங்கச்சிலை!

திகைத்தாலும் அந்த சூட் (சறுக்கு வழி) முதலாளியின் அறையிலிருந்து வருவதினால் குழந்தைகளை அதன் மூலம் அனுப்பியதற்கு ஏதோ காரணமிருக்க வேண்டும் என்ற முடிவோடு குழந்தைகளைப் பார்த்துச் சிரித்து விட்டுத் தங்கள் பணியில் ஈடுபட்டார்கள். நித்யாவும் சத்யாவும் அங்கு அடுக்கப்பட்டிருந்த புத்தகப் பண்டில்களின் பின்னால் போய் மறைந்து கொண்டார்கள்.

''வாங்க ஜெயராஜ்! ஏது இவ்வளவு தூரம் - நம்ம கடையைத் தேடிக்கிட்டு? ஏதாவது முக்கிய புத்தகம் தேவையா?'' மலர்ந்த முகத்துடன் ஜெயராஜை நெருங்கினார் அரங்கநாதன்.

கடையின் மூலை முடுக்குகளை உன்னிப்பாக நோட்டமிட்டுக் கொண்டிருந்த ஜெயராஜ், ''என்ன, இண்டலா பண்றீங்க அரங்கம்? நான் புத்தகம் படிக்கிற புத்திசாலி இல்லேன்னு உமக்குத் தெரியும்... காலையிலே ரொம்ப பிஸி போலிருக்கு...'' அரங்கநாதனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் ஜெயராஜ்.

''என்னைப் போன்ற வியாபாரிங்களுக்கு எல்லா நேரமும் பிஸிதான். என் அறைக்குப் போகலாம். வாங்களேன்....'' என்று கூறியபடி முன்னால் நடந்தார். அவன் சந்தேகப்படும் முன் தன் ஆபீஸ் அறையைத் தானே காட்டி விட வேண்டும் என்ற நோக்கத்துடன்.

''என்ன சாப்பிடறீங்க...? கூலா ஏதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா...?''

''எதுவும் வேண்டாம்.



''இவன் என் பேரன்...''

''பேரு?''

''கு'பேரன்.''

— டி.என். பாலகிருஷ்ணன்

மோகன் உங்க நெருங்கிய நண்பர் இல்லியா...?''

''ஏன், நீங்களும்தான் என் நண்பர், இல்லியா ஜெயராஜ்? நான் மோகனைப் பார்த்து ஒரு மாசமாச்சு. தமிழ் இலக்கியங்களைத் தேடிக்கிட்டு வருவார் - நான் தமிழ் நாட்டுக்காரன் என்பதினாலே அப்படி ஏற்பட்ட பரிச்சயம்தான். வேறு என்ன தொடர்பு? தவிர அவர் டெல்லிவாசி. சமீபத்தில்தான் ஏதோ காரியமாக இங்கே வந்திருப்பதாகச் சொன்னார்... உட்காருங்க ஜெயராஜ்! நின்னுகிட்டே பேசினா எப்படி?''

''அவரோட குழந்தைங்க - இரண்டு பேர், ஒரு பையனும் பொண்ணும் உங்களைத் தேடிக்கிட்டு வரலியா?'' அரங்கனின் முகத்தைப் பார்த்தபடியே கேட்டான் ஜெயராஜ்.

''மோகனோட குழந்தைகளா? என்னைத் தேடிக்கிட்டா? ஆச்சரியமா இருக்கே! அவர்கள் எப்படி இருப்பார்கள், என்ன வயசுன்னு கூடத் தெரியாது. சின்னக் குழந்தைகளா, பெரிய...'' முகத்தில் வியப்பைத் தேக்கியபடி இயல்பாகப் பேசினார் அரங்கன்.

''நானும் அவர்களைப் பார்த்ததில்லே அரங்கம். கோடை விடுமுறைக்குக் குழந்தைகளை இங்கே வரும்படி கூறி இருந்தாராம் மோகன். இன்னிக்கு வருவதாக இருந்த அவர்களை ஸ்டேஷனில் சந்திச்சுக் கூட்டி வரும்படி எங்கிட்ட கேட்டுக்கிட்டார். நேற்று காலை அவர் அவசரமா மலைப் பகுதிக்குப் போகும்படியாயிட்டுது. என்னோடு வரும்படி குழந்தைகளுக்குக் கடிதமும் கொடுத்திருந்தார் மோகன். அதிலே உங்களையும் உங்க கடையையும் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். காலையிலே நான் ஸ்டேஷனுக்குப் போனேன். குழந்தைங்களைக் காணலே. எனக்கு ஒரே கவலையாய் போச்சு. ஒருவேளை குழந்தைகளுக்கு அவர் முன்பு எழுதிய கடிதத்தில் உங்களைப் பத்தி எழுதி இருந்து - அவங்களுக்கு என்னை அடையாளம் தெரியாததினாலே இங்கே வந்திருப்பாங்களோன்னுதான்...'' அரங்க நாதனை ஊடுருவினான் ஜெயராஜ்.

''நீங்க சொன்ன இத்தனை விஷயமும் எனக்குப் புதுசு ஜெயராஜ். மோகன் எனக்குச் சமீபத்தியப் பழக்கம்தான். என் வீட்டு விலாசம்கூட அவருக்குத் தெரியாது. அவருக்குக் குழந்தைகள் இருப்பதோ, அவர்கள் இன்று வர இருந்ததோ எனக்குத் தெரியாது...'' அப்பாவியாக ஜெயராஜைப் பார்த்தார் அரங்கன்.

''அப்படியா...? ம்... ஒருவேளை அந்தக் குழந்தைங்க உங்களைத் தேடிக்கிட்டு வந்தா -அவங்க பேரு நித்யா, சத்யா - எனக்கு உடனே தகவல் கொடுங்க. ஏடாகூடமா ஏதாவது செஞ்சீங்கன்னா... ஜெயராஜ் எப்படிப்பட்டவன்னுதான் உங்களுக்குத் தெரியுமே! அப்ப நான் வரட்டா?'' என்று கூறியபடி, நிதானமாக மீண்டும் ஆபீஸ் அறையையும் கடையின் முன் பக்கத்தையும் நோட்டமிட்டபடி வெளியேறினான்.

அரை மணிக்குப் பிறகு, ''குழந்தைகளா!'' என்று கூப்பிட்டபடி பேஸ்மெண்ட் படிகள் வழியே இறங்கி வந்தார் அரங்கன். நித்யாவும் சத்யாவும் பண்டல்களின் பின்னாலிருந்து வெளிப்பட்டனர்.


''ஜெயராஜ் போயிட்டானா சார்?'' சத்யா கேட்டான்.

''போயிட்டான் - ஆனா சந்தேகத்தோடதான் போறான். நல்லவேளை, அவன் பார்வை சறுக்கு வழித் தடுப்பு மேல படலே. பேஸ்மெண்டில் பார்ஸல் செக்ஷன் இருப்பதும் அவனுக்குத் தெரியாது - தப்பிச்சீங்க! ஒரு பார்ஸல் கட்டின் மீது அமர்ந்து கொண்டவர், ''இப்போ உங்களை என்ன செய்யறது?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டார்.

''இப்போ உங்க முன்னே உள்ளது இரண்டு பிரச்னைகள் சார்!'' என்றாள் நித்யா. ''நாங்கள் மீண்டும் அவனிடம் சிக்கி விடாமல் எங்களுக்குப் பாதுகாப்புத் தரணும். அடுத்து எங்க அப்பாவை அவனிடமிருந்து விடுவிக்கணும்.''

''உங்க அப்பாவை அவன் ரகசியமான இடத்தில் கைதியாக அடைத்து வைத்திருப்பதாகச் சொன்னீங்க இல்லியா?''

''அப்படித்தான் சொன்னான் ஜெயராஜ். மலையிலே ஒரு புராதன குகைக் கோயிலில் புதைந்து கிடக்கும் புதையலைக் கண்டுபிடிக்கத் தனக்கு உதவும்படி எங்க



டாடியைத் துன்புறுத்தினான் போலிருக்கு. எங்க டாடி அதற்கு உடன்படலே - பட மாட்டார். புதையுண்டு கிடக்கும் கோயிலைக் கண்டுபிடிக்க, புரொபஸர் புண்ணிய கோடிக்கு உதவத்தான் எங்க அப்பா இங்கே வந்தார். சரித்திரப் பொக்கிஷத்தை இந்த ரௌடியின் கையில் ஒப்படைக்க இல்லே!'' உணர்ச்சி வசப்பட்டான் சத்யா.

அப்போது படிகளில் யாரோ தடதடவென்று இறங்கி வர, திடுக்கிட்டுப் பார்த்தார்கள். ''ரங்குடு நீயா?'' என்றார் அரங்கநாதன். சத்யாவை விட, வயதில் பெரியவனான, வாலிபனுமில்லாத பையனுமில்லாத ஓர் உருவம். குப்பத்து வாசி போன்ற தோற்றம். கத்தரிக்கோல் காணாத அடர்ந்த தலைமுடி. அழுக்கேறிய சட்டையும் அரை டிராயரும் அணிந்த வலுவான உடல். பார்வையில் ஒருவிதக் கவர்ச்சி.

''வணக்கம் அங்கிள்!'' என்றான் முகம் மலர அந்தப் பையன்.

''ஏண்டா ரங்குடு, இப்ப இங்கே எதுக்கு வந்தே? இந்த மாதிரி உன் இஷ்டத்துக்கு நினைச்ச போதெல்லாம் வரக் கூடாதுன்னு சொல்லி இருக்கேனில்லே, போ- போ! நான் ரொம்ப முக்கியமான விஷயமாப் பேசிக் கிட்டிருக்கேன். இந்தா! பசியாற ஏதாவது வாங்கிச் சாப்பிடு போ!'' என்று கூறி அவனிடம் இரண்டு ரூபாய் நாணயத்தைக் கொடுத்தார் அரங்கநாதன். அதை வாங்கிக் கொண்டு இரண்டு படியேறியவன் - அப்படியே அந்தப் படியில் உட்கார்ந்தபடி இவர்களையே பார்க்கலானான் ரங்குடு.


''இந்தப் போக்கிரியாலே எப்பவும் இதே தொல்லை!'' செல்லமாகக் கடிந்துக் கொண்டார் அரங்கநாதன். ''ஆனா இவனை விரட்டவும் எனக்கு மனசு வராது. நான் கூறும் சிற்றேவல்களை உற்சாகத்தோடு செய்வான். பெற்றோர் கிடையாது. ரங்குடு ஓர் அநாதை. பள்ளிக்கூடம் போனதில்லை. ஆனால் புத்தகங்களைப் படிப்பதில் ஒரு வெறி. அதற்காகவே இங்கே சுத்திக்கிட்டிருப்பான். பொழுது போகாவிடில் கடைக்கு வந்து ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அதில் மூழ்கிப் போவான். வாயும் கையும் ரொம்ப சுத்தம் பயலுக்கு - பொய் சொல்ல மாட்டான், பிறர் பொருளுக்கு ஆசைப் படவும் மாட்டான். அதனாலேயே இந்தப் பயல் மேலே எனக்கு ஒரு இனம் புரியாத 'பாசம்...'' என்று ரங்குடுவைப் பற்றிக் கூறியவர்-

''அது கிடக்கட்டும், இப்ப நாம் என்ன செய்யலாம் என்பதைப் பார்ப்போம். ஜெயராஜோட ஆட்கள் இந்த நகரை வலை போட்டுத் தேடிக்கிட்டிருப்பாங்க. உங்கப்பா உங்களை இங்கே தொடர்பு கொள்ளும்படி எழுதி இருப்பது அவங்களுக்குத் தெரியும். என் நடவடிக்கைகளையும் கவனிப்பாங்க. உங்களை எங்கே கொண்டு போய், யார் பொறுப்பில் ஒப்படைப்பது...?'' என்று சற்று நேரம் நெற்றிப் பொட்டை அழுத்திக் கொண்டவர் சட்டென்று -

''ஆ! அதுதான் சரி. ஏய் ரங்குடு இங்கே வா!'' என்று அவனை அழைத்தார். அவனிடம் தெலுங்கில் படபடவென்று ஏதோ பேசினார். விவரங்கள் கூறினார். கட்டளையிட்டார். ரங்குடு அடிக்கடி 'சரி' என்பதாக தலையசைத்தான். இடை இடையே நித்யாவையும் சத்யாவையும் பார்த்துக் கொண்டவன், டிராயர் பையிலிருந்து ஒரு பிச்சுவாக் கத்தியை எடுத்து, அதன் கூர்மையை விரல்களால் சோதித்துப் பார்த்துக் கொண்டான்.

''கத்தியை வைச்சிட்டு இவன் என்ன செய்யப் போறான்?'' குழப்பத்துடன் நித்யா முணுமுணுத்தாள். இப்போது ரங்குடு பேசினான் அரங்கநாதனிடம். அவன் விழிகளில் ஒளி வீசியது. வார்த்தைகளில் கனல் பறந்தது.

அரங்கநாதன், ''ஐதராபாத் குண்டர்கள் அத்தனை பேரிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றுவதாக 'சவால்' விடுகிறான் ரங்குடு. சாதிக்கக் கூடிய சாமர்த்தியசாலிதான் பயல்! உங்களை அவன் இருப்பிடத்துக்குக் கூட்டிட்டுப் போகச் சொல்லி இருக்கேன். அது பத்திரமான இடம். இந்தச் சூடு கொஞ்சம் தணிந்ததும் மாற்று ஏற்பாடு செய்யறேன். இருட்டியதும் ஒரு டாக்ஸியை ரங்குடு வீடு இருக்கும் தெருமுனைக்கு அனுப்பறேன். அந்த டாக்ஸியில், ரங்குடு உங்களை நகருக்கு வெளியேயுள்ள என் பண்ணை வீட்டுக்குக் கூட்டிப் போவான். நான் பிறகு அங்கு வந்து சேர்ந்து கொள்ளுகிறேன். மலைக் காட்டுக்குப் போகிற திட்டம் பற்றி அப்போது பேசலாம்'' என்றார்.



''உங்களுக்கு எப்போதிலிருந்து தூக்கம் வர்றதில்லைங்கிறீங்க?''

''நைட் வாட்ச்மேன் வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து!''

— சந்தியூர் ஏ. கோவிந்தன்

''என்னோட இருக்கும்போது நீங்க யாருக்கும் பயப்பட வேண்டாம்!'' என்றான் ரங்குடு சுந்தரத் தெலுங்கு கலந்த தமிழில்!

''உங்கிட்டே கத்தி இருக்கும்போது, நாங்க ஏன் பயப்படறோம்?'' என்றாள் சத்யா.

''ரங்குடு - முதல்ல நீ என்ன செய்யறேன்னா - இவங்க ரெண்டு பேரும் காலையிலிருந்து படு பட்டினியா இருக்காங்க. நீ ஹோட்டலுக்கு இவங்களைக் கூட்டிப் போயி, வேண்டியதை வாங்கிக் கொடு, இந்தா இதை வைச்சுக்கோ...'' என்று கூறிய அரங்கநாதன் அவன் கையில் ரூபாய் நோட்டுகளைத் திணித்தார். ரூபாய் நோட்டுகளை பாக்கெட்டில் திணித்துக் கொண்ட ரங்குடு, பேஸ்மெண்ட் படிகளின் உச்சிக்குப் போய், வீதியை நோட்டமிட்டவன், புருவம் சுருங்க இரண்டு படி இறங்கி வந்து அரங்கநாதனைப் பார்த்து மெல்லிய குரலில் கூறினான்.

''ஜெயராஜின் அடியாள் காருடன் எதிர்ச்சாரியில் நின்று நம்ம கடையை வாட்ச் பண்ணிக்கிட்டிருக்கான் அங்கிள்!'' என்றவன், உடனே ''பரவாயில்லே - அந்தக் குண்டனை விரட்ட ஒரு வழி பண்றேன். நீங்க இங்கேயே இருங்க'' என்று நித்யா - சத்யாவிடம் கூறி விட்டுத் தெருவுக்குப் போனான். அங்கு நடைபாதையில் உட்கார்ந்து கொண்டிருந்த இரண்டு பொடியன்களின் அருகில் போனான். அவர்களை அணைத்தபடி, எதிர்சாரியில் நாட்டுச் சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்த முரடனைக் காட்டி அவர்கள் காதில் ஏதோ கூறி, அவர்கள் கையில் இரண்டு ரூபாய் நாணயத்தைத் திணித்தான்.

பொடியன்கள் இருவரும், பராக்குப் பார்த்தபடி, சுருட்டுப் பிடிக்கும் மோட்டார் ஆசாமியின் அருகில் போனார்கள். ஒரு தெலுங்கு சினிமாப் பாடலைப் பாடி, நையாண்டி செய்தபடி அவன் முன் ஆடினார்கள். அந்தப் பாடல் அவனைக் கேலி செய்வது போலிருக்கும் போலே. அந்த முரடன் கோபத்துடன்' கையோங்கி அவர்களை விரட்டினான். ஆனால் அந்தப் போக்கிரிப் பையன்கள் சற்றுத் தள்ளி போய் நின்று கொண்டு மேலும் தீவிரமாக அவனை வம்புக்கிழுத்தார்கள். முரடன் முகம் சிவக்க, சுருட்டைத் தூர வீசிவிட்டு அந்தக் குறும்புக்காரப் பையன்களைத் துரத்திக் கொண்டு ஓடினான்.

ரங்குடுவின் திட்டமும் அதுதானே!

''பாதை நேராயிடுச்சு வாங்க!'' என்று கூறியபடி, நித்யாவையும் சத்யாவையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினான் ரங்குடு. ''ஏய் ரங்குடு உங்களை இரவு சந்திக்கிறேன்'' என்று அவர்களை அனுப்பி வைத்தார் அரங்கநாதன்.

''சீக்கிரமா என் பின்னாலேயே வாங்க... வேகமா!'' என்றபடி சரசரவென்று சந்து பொந்துகளில் புகுந்து போனான் ரங்குடு.

''யப்பா, உன் வேகத்துக்கு எங்களாலே தாக்குப் பிடிக்க முடியாதப்பா!'' என்றபடி மூச்சு வாங்க ஓட்ட நடையாகப் பின் தொடர்ந்தான் சத்யா நித்யாவுடன்.

அரங்கநாதனின் உத்தரவுப்படி நித்யாவையும் சத்யாவையும் ஒரு ஹோட்டலுக்கு அழைத்துப் போனான் ரங்குடு. ''புத்தகக் கடை ஐயா சொன்னபடி, முதல்ல உங்க பசிக்கு உணவு! எனக்குமே பசிதான். பசிச்சா அவர் கடைக்குப் போவேன். என்னைக் கண்டதும் சிடுசிடுத்தாலும் மறக்காம காசு கொடுப்பாரு. டீயும் பன்னும் வாங்கிச் சாப்பிட'' என்று தன்னிலை விளக்கம் அளித்தான் அவர்களுக்கு. ஹோட்டல் பார்க்க எளிதாக இருந்தாலும் பதார்த்தங்கள் சுவையாக இருந்தன. அவர்கள் பசியும்கூட அதற்குக் காரணமாக இருக்கலாம்.

பசி அடங்கியதும் அவர்களிடம் புதிய தெம்பு கூடியது. ரங்குடு அவர்களைத் தன் குடியிருப்புக்குக் கூட்டிப் போனான். ''இதுதான் என் பங்களா!'' என்று தன்னால் உருவாக்கப்பட்டிருந்த - அதைக் குடிசை என்பதா 'ஷெட்' என்பதா? - அமைப்பைப் பெருமையோடு அவர்களிடம் காட்டினான். சாக்கு முதல், தகர டப்பாத் தகடுகள், தாறுமாறாக உடைந்த ஆஸ்பெஸ்டாஸ் மேல் கூரை, பிளாஸ்டிக் ஷீட்டுகள் -

இப்படி அதில் இடம் பெறாத பொருள்களே கிடையாது. அனைத்தையும் எப்படி எப்படியோ இணைத்து ஒட்டும் போட்டு ஒரு குடியிருப்பாக்கியிருந்தான் ரங்குடு.

"ரொம்பப் பிரமாதமா இருக்கே உன் வீடு!" என்றான் சத்யா.

"உன் கைத்திறன்தானே இத்தனையும்?" என்றாள் நித்யா. அவர்கள் கேலியை ரசித்த ரங்குடு சிரித்துக் கொண்டான். வெளியே அந்த அமைப்பு கன்னா பின்னாவென்று இருந்தாலும் உள்ளே சுத்தமாக இருந்தது. சுவரில் ஏராளமான படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. சினிமா நட்சத்திரங்களின் படங்கள் இருந்தாலும் பல்வேறு விதமான நாய்க்குட்டிகளின் படங்கள்தான் அதிகமாக இருந்தன.

"உனக்கு நாய்கள்னா ரொம்பப் பிடிக்கும் போலிருக்கு!" என்றாள் நித்யா.


"நீ நாய் வளர்க்கறயா?" என்று கேட்டான் சத்யா.


"ம்... அதோ அதுதான் நான் வளர்க்கப் போற நாய்" என்று கம்பீரமாக முறைக்கும் ஒரு அல்சேஷனின் படத்தைக் காட்டினான் ரங்குடு. "நான் வளர்க்க விரும்பும் என் அபிமான நாய் அதுதான். பேரு கூடத் தேர்ந்தெடுத்து விட்டேன். டைகர்! நல்லாருக்கா?"


"ரங்குடு நீ கவலைப் படாதே. எங்கப்பாவைக் கண்டுபிடிச்சப்பறம் உனக்கு நிஜமாவே ஒரு அல்சேஷன் நாய்க்குட்டியை – டைகரை வாங்கி பிரசண்ட் பண்ணச் சொல்றேன் எங்க டாடியை. பிராமிஸா சொல்றேன்" என்றாள் நித்யா.

ரங்குடுவின் கண்களில் ஒரு ஜொலிப்பு – விழியோரத்தில் நீர் திரண்டது. நிஜமான நாய் கிடைக்கப் போவதை எண்ணிக் கசிந்த ஆனந்தக் கண்ணீரா? குஷியோடு ஒரு குட்டிக் கரணம் போட்டு நின்றான் அவன். "உங்கப்பாவைக் கண்டு பிடித்து மீட்டுத் தருவது என் பொறுப்பு – கவலையே படாதீங்க. புத்தகக் கடைக்காரரு சொன்னா சொன்னபடி செய்வாரு. டாக்ஸி அனுப்பறதாச் சொல்லி இருக்காரு. அது வந்துட்டுதான்னு நான் பார்த்து வரேன். நீங்க ரெஸ்ட் எடுத்துக்குங்க. ஜெயராஜோ, அவன் ஆட்களோ இந்த ரங்குடுகிட்டே இருந்து உங்களைக் கொண்டு போக முடியாது. கொன்னுடுவேன் கொன்னு!" என்று பிச்சுவாவைச் சுழற்றினான். சூரிய ஒளி பட்டு அது பளபளத்தது. குடிசையின் கதவைச் சாத்தி விட்டு அரங்கநாதன் அனுப்பப் போகும் டாக்ஸியைப் பார்க்கக் கிளம்பினான் ரங்குடு.


(தொடரும்)





"பலத்த யோசனை பண்ணிகிட்டு இருக்கேன்!"
"என்ன யோசனை?"
"ஒரு யானை வாங்கலாம்னுதான்!"
"அப்ப கனத்த யோசனைனு சொல்லுங்க!"
— காழி ஆர். சீதாராமன்


"உங்க அண்ணன் எதுக்கு செருப்பு மாட்டிகிட்டு தூங்கறார்?"
"அவருக்குத் தூக்கத்துல நடக்கற வியாதி இருக்காம்...!"
— நெ. இராமன்



"செருப்பு, காலைக் கடிக்காமல் இருக்க என்ன செய்யணும்?"
"தெரியலையே!"
"பல் இல்லாத செருப்பா பார்த்து வாங்கணும்!"
— நடராஜன்


"அவன் படுக்கும்போது தலையணைக்கு அடியில் டிக்ஷனரியை வச்சுக்கிட்டுத்தான் படுப்பான்!"
"எதற்கு?"
"இல்லேன்னா அர்த்தமில்லாத கனவெல்லாம் வருமாம்...!"
— பாலு


"ரொட்டிக் கடைக்காரர் வீட்டுத் திருமணம் எப்படி நடந்தது?"
"ஜாம்... ஜாம்னு நடந்தது!"
— ஔவை ஏ.எஸ். யோகானந்தம்.

ஹா, ஹா, ஹா!

கோகுலம் க்விஸ்




1. எலி ________ வகை விலங்கு.
2. ஒரே ஒரு துணைக்கோள் உள்ள கிரகம்________.
3. விமானத்தைக் கண்டறிந்த சகோதரர்கள் ________, ________.
4. இந்தியாவில் பிறந்த இங்கிலாந்து கிரிக்கெட் கேப்டன்________.
5. உலகிலேயே மிகப் பெரிய உப்பு ஏரி ________.
6. ஆஸ்திரேலியாவின் தலைநகர் ________.
7. நோபல் பரிசை உருவாக்கியவர் ________.
8. நாய் வியர்வையை ________ மூலம் வெளியேற்றுகிறது.
9. மிகவும் வெப்பமான கோள் ________.
10. சமண மதத்தை இந்தியாவெங்கும் பரப்பியவர்________.

மேலே உள்ள பத்து கேள்விகளுக்கும் மூளையைக் கசக்கி விடைகளைக் கண்டுபிடியுங்கள். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். விடைகளை எழுதி அனுப்புவதோடு முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முடிவு தேதி 30.9.99

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97



கிளி ஜோசியம்!

கதை : வெ.அ. கார்த்திகேயன்
பத்தாம் வகுப்பு, வெள்ளோடு


படம் : சசி



வேலை தேடி பட்டணத்திற்கு வந்து சேர்ந்தான் அப்பாவி நாச்சிமுத்து.




'சே! ஒரு நாள் முழுவதும் அலைந்தும் வேலை கிடைக்கவில்லையே' என வருந்தினான்.




மிகவும் களைப்படைந்த நாச்சிமுத்து ஓய்வெடுக்க ஒரு இடத்தைத் தேடினான். அவன் கண்ணில் ஓர் ஆலமரம் தென்பட்டது. மரத்தடியில் அமர்ந்தான்.




அங்கு நாச்சிமுத்தருகே ஒரு கிளி ஜோசியரும் அமர்ந்திருந்தார். அவருக்கு நாச்சிமுத்து ஓர் ஏமாளி என்று புரிந்தது.




மெதுவாகப் பேச்சுக் கொடுத்தார் ஜோசியர். "தம்பி ஊருக்குப் புதுசா? என்ன விஷயமாக வந்திருக்கே?" என்று கேட்டார்.


ஆமாம்! வேலை தேடி வந்தேன். ஒரு வேலையுமே கிடைக்கலே'' என்று வருத்தப் பட்டான் நாச்சி முத்து.
''இதுக்கு ஏன் கவலைப்படறே? அஞ்சு ரூபாய் கொடுத்து ஜோசியம் பார்த்தா வேலை கிடைக்குமா, கிடைக்காதான்னு தெரிஞ்சு போயிரும்'' என்றார் ஜோசியர்.
நாச்சிமுத்து சம்மதித்தான். ''கிளியே வெளியில் வந்து நாச்சி முத்துவுக்கு ஒரு நல்ல சீட்டு எடுத்துக் கொடு'' என்றார்.
கிளி ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தது. நாச்சிமுத்து நெஞ்சம் படபடக்க உட்கார்ந்திருந்தான். ''நாச்சிமுத்து உனக்கு வேலை கிடைக்காது'' என்றார் வருத்தமாக முகத்தை வைத்துக் கொண்டு ஜோசியர்.
''ஐயோ! நான் என்ன செய்வேன்? எப்படியாவது ஒரு வேலை வேணுமே'' என்று புலம்பினான் நாச்சிமுத்து.
''இதுக்கு ஒரே வழிதான் இருக்கு. நூறு ரூபாய் கொடுத்தால் பரிகாரம் பண்ணி தோஷத்தை நீக்கி விடுவேன். வேலையும் கிடைக்கும்'' என்றார் ஜோசியர்.


"எங்கிட்ட இருக்கிறதே நூறு ரூபாய்தான்" என்றான் நாச்சிமுத்து.
"இதைச் செய்தால் ஒரே நாளில் வேலை உன்னைத் தேடி வரும்" என்று ஜோசியர் கூறினார்.
"கொஞ்சம் யோசிச்சு சொல்றேன்."
"சரி! இந்தக் கிளியைப் பார்த்துக்க. சாப்பிட்டு விட்டு வரேன்" என்று கிளம்பினார் ஜோசியர்.
"நாச்சிமுத்து, நாச்சிமுத்து" என்று குரல் கேட்டது.
"யார் பேசறது?" என்று கேட்டபடி நோட்டம் விட்டான்.
"கிளிதான் பேசறேன். அந்த ஆளை நம்பாதே. உன்னை ஏமாத்தறார்" என்றது கிளி.
"எனக்கு வேலை வேணுமே!" என்றான் நாச்சிமுத்து. "உனக்கு வேலை வேணும்னா நாலு இடத்துல அலைந்து தேடு" என்றது கிளி.
"நான் ஏதோ ஒரு சீட்டை எடுத்துக் கொடுக்க, அதுபடிதான் உன் விதி நடக்குமா, யோசிச்சுப் பார்."
"உன்னை மாதிரி நிறைய பேரை ஏமாற்றி இருக்கிறார். அவர் திரும்பி வர்றதுக்குள்ளே ஓடிப் போயிரு" என்றது கிளி.
"நன்றி கிளியே! கூண்டைத் திறந்து விடறேன். நீயும் பறந்து போ" என்றான் நாச்சிமுத்து.
நூறு ரூபாய் கிடைக்கப் போகும் சந்தோஷத்தில் திரும்பி வந்த ஜோசியர் கிளியையும் நாச்சிமுத்துவையும் காணாது திகைத்து நின்றார்.

கதைகள் அதிகம் வேண்டும்!



சல்யூட்!

ஆகஸ்ட் மாத அட்டையைப் பார்த்ததும் என்னையறியாமல் கை சல்யூட் அடித்தது. சுதந்திர தினத்தைக் கொண்டாடும் விதத்திலும் கார்கில் போரில் வெற்றி பெற்ற விதத்திலும் அமைந்தது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

– ஆர்.வி. மயில்வாகனன், பத்தாம் வகுப்பு, டான்பாஸ்கோ பள்ளி, மதுரை.

திகில், திருப்பங்கள்...

நான், என் நண்பர்கள் சரவண ராஜா, ஹரீஷ் ஆகியோர் கோகுலத்தின் தீவிர வாசகர்கள். 'தங்கச் சிலை' தொடர்கதையின் விளம்பரத்தில் பார்த்தபடியே கதையும் திகில், திருப்பங்களோடு சென்று கொண்டிருக்கிறது.

– ஹ. கணேஷ், பாபநாசம், தஞ்சை மாவட்டம்.

எப்படி அனுப்புவது?

ஓவியப் போட்டி பகுதிக்கு முகவரிக் கூப்பன் வெளியிடுவதில்லை. ஆகவே எந்த முகவரிக்குப் படங்களை அனுப்ப வேண்டும்? மேலும் என் படைப்புகளை இன்லாண்ட் லெட்டரில் அனுப்பலாமா?

– எஸ். ரவிவர்மன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல் நிலைப்பள்ளி, விளாத்தை.

★ ஒவ்வொரு இதழிலும் 80 ஆம் பக்கத்தில் வெளியிடும் முகவரிக்கே உங்களின் படைப்புகள் அனைத்தையும் அனுப்பி வைக்கலாம். இன்லாண்ட் லெட்டரில் தாராளமாக எழுதி அனுப்பலாம் ரவிவர்மன்! – ஆர்.

கருத்துகள்...

எங்கள் பள்ளியில் அறிவியல் இல்லங்கள் அமைத்து பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகிறோம். நிறைய புத்தகங்கள் படிக்கிறோம். அதில் கோகுலமும் ஒன்று. வண்ணத்துப் பூச்சிப் போட்டியைப் பார்த்தோம். நிறைய வண்ணத்துப் பூச்சிகளை அனுப்பி வைத்துள்ளோம். கோகுலம் இதழ் பற்றிய கருத்துகளைச் சேகரித்து அனுப்பி வைக்கிறோம்.

– ஜி. கனகதேவி, ராபர்ட் ஹூக் அறிவியல் இல்லம், புனித சேவியர் உயர்நிலைப் பள்ளி, கன்னிசேரிபுதூர், விருதுநகர் மாவட்டம்.

காணாமல் போய்விட்டது!

வெளிநாடுகளில் இருக்கும் எறும்புகள் மலைப்பாம்பையும் மனிதர்களையும் கொன்று சாப்பிடுவதைப் படித்தபோது நம்மூர் எறும்புக் கடி கண் காணாமல் போய் விட்டது!

– செ. சரவணக்குமார், சாத்தூர்.

பயமாக இருக்கிறது!

எனக்கு கோகுலம் என்றால் ரொம்பப் பிடிக்கும். ஒரு இதழைத் தவற விட்டாலும் கூட ஏதோ ஒன்றை இழந்தது போல் தவிப்பேன். இப்பொழுது கோகுலத்தில் கதைகள் அதிகம் இடம் பெறுவதில்லையே. கதைகள் குறைந்து கொண்டே போய் விடுமோ என பயமாக உள்ளது. அயல்நாட்டு வாசகர்களிடம் இந்தியத் தொடர்பு முகவரியைக் கேட்பதற்கான காரணம் என்ன?

– எம்.டி. பாத்திமா மின்ஹா, பன்னிமுல்லை, இலங்கை.

★ அன்புள்ள பாத்திமா உங்களின் பயம் தேவையற்றது. கோகுலத்தில் கதைகள் அதிகமாகவே இடம் பெறுகின்றனவே. அறிவியல், விளையாட்டு, சிரிப்பு என பத்திரிகைக்கு எல்லா அம்சமும் தேவை தானே! உங்கள் படைப்பு கோகுலம் இதழில் பிரசுரம் ஆனால் கோகுலம் இதழும் அதற்கான சன்மானமும் அனுப்பி வைக்கிறோம். இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க இயலாது. எனவே இந்தியத் தொடர்பு முகவரி கொடுத்தால் அவர்களிடம் இவையிரண்டும் போய்ச் சேரும். இதற்காகத்தான் கேட்கிறோம். – ஆர்.



CAMPING CAN BE FUN

THE WEEPING DEER

SILENCE IS GOLDEN!

BATTLE OF SEXES

SEPTEMBER 1999
Rs. 6/- only



THE BUFFALO BILL

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097



விழி பிறந்தது!

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் ஐந்தாவது கதை

புதிதாகக் கட்டப்பட்டுள்ள அந்தப் பங்களாவின் முன் ஒன்றன்பின் ஒன்றாக நான்கு லாரிகள் வரிசையாக வந்து நின்றன. அந்தப் பங்களாவின் தோற்றம் புதுப் பணக்காரனின் பெருமை போல் தலை நிமிர்ந்து செல்வச் செழிப்போடு காணப் பட்டது. லாரிகளின் சத்தம் கேட்டு எதிர்ப் புற காலனியைச் சேர்ந்த சுகன்யா வீட்டைவிட்டு வெளியில் வந்து பார்த்தாள். லாரிகளின் பின்னால் ஒரு மாருதி கார் வந்து நிற்க அதில் இருந்து கணவனும் மனைவியுமாக இருவர் இறங்கினர்.

"எல்லா சாமான்களையும் எந்தெந்த இடங்கள்ள வைக்கணும்னு வேலையாட்களுக்குச் சொல்லணும். சீக்கிரம் இறக்குங்க" கணவனிடம் மனைவி கூறினார். கணவர் தலையை ஆட்டிக் கொண்டே தன் வயதை ஒத்த ஒரு சிறுமியைக் கைகொடுத்து இறக்கினார். அச் சிறுமியைக் கண்டதும் சுகன்யாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. விளையாட ஒரு தோழி கிடைத்து விட்டாள். அப்பொழுதே சென்று அவளிடம் அறிமுகம் செய்து கொள்ள சுகன்யாவின் மனம் துடித்தது. அம்மாவிடம் கேட்டால் திட்டு விழும்.

தன் வீட்டினுள் எட்டிப் பார்த்தாள் சுகன்யா. அம்மா சமைத்துக் கொண்டிருந்தார். இப்பொழுது சென்று எதிர் வீட்டுக்குச் செல்ல அனுமதி கேட்டால், அம்மா விட மாட்டார். அதுவும் சுகன்யா மீது எப்பொழுதும் கவனிப்பு அதிகமாக இருக்கும். அவள் ஒரு இருதய நோயாளி என்பதால். தன் அக்காவையும் காணவில்லை. தம்பி தூங்குகிறான். சத்தமில்லாமல் போய் வரலாம் என்று முடிவு செய்த சுகன்யா மெதுவாக சந்தடியின்றி எதிர் பங்களாவிற்குள் நுழைந்தாள்.

பங்களாவினுள் அந்தச் சிறுமி துறுதுறுவென்று விளையாடிக் கொண்டிருந்தாள். தந்தையிடமிருந்து எதையோ பறித்துக் கொண்டு ஓடினாள். சுகன்யாவைப் பார்த்து "ஹாய்" என்றாள்.

"என் பேரு சுகன்யா. எதிர் வீட்டுல இருக்கேன்" சுகன்யா தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

"என் பேரு மீனலோச்சனா. அப்பா செல்லமாக மீனு என்று கூப்பிடுவாங்க" என்றாள் மீனு.

"நீ என்ன படிக்கிறே?" என்று கேட்டார் சுகன்யாவைப் பார்த்து மீனாவின் அப்பா.

"ஏழாவது படிக்கிறேன்."

கே. சோபன்பாபு

"குட். மீனு உனக்கு ஃபிரெண்ட் கிடைச்சாச்சு. விளையாடு. நான் அம்மாவுக்கு உதவி செய்யப் போறேன்" என்று அப்பா நகர்ந்தார்.

"சரி டாடி."


"உன் கூட வேற யாரும் இல்லையா மீனு?"

"இல்லை. நான் ஒரு பொண்ணுதான். உங்க வீட்ல நீ மட்டும்தானா?"

"இல்ல, ஒரு அக்காவும் ஒரு தம்பியும் இருக்காங்க. எங்க அப்பா ஸ்ரீலேகா கம்பெனியில சேல்ஸ்மேனாக இருக்கிறார்."

"அது எங்க தாத்தா கம்பெனி. எங்க





அம்மாவோட அப்பாதான் அதுக்கு முதலாளி."

"அப்படியா?"

"சரி வா, நாம் விளையாடலாம்."

"**ஏ**ங்க மீனு எங்கே? எதையாவது எடுத்துப் பாழ்படுத்திடப் போறா. சும்மாவே இருக்க மாட்டா" என்றார் மீனுவின் அம்மா.

"அவளுக்கு ஒரு புது பிரெண்ட் கிடைச்சிருக்கா. விளையாடிட்டு இருக்கா. எதிர்புற காலனியாம்."

"இங்கேயும் நண்பர்கள் பட்டாளமா? நீங்க கொடுக்கிற செல்லம்தான் அவளைக் கெடுக்குது. எதிர்புற காலனிங்குறீங்க. எல்லாம் நடுத்தர குடும்பமா இருக்கும். நம்ம தகுதிக்குத் தகுந்த மாதிரி பிரெண்ட் வச்சுக்குறதில்ல."

"இத பார் காமினி, சின்னப் பிள்ளைங்க அன்பை பணத்தால எடை போடாதே. உனக்குப் பிடிக்கலைன்னா அவங்க கூட பழகாதே. ஆனால் மீனுவை தடுக்காதே. நாளைக்கு சமுதாயத்துல அவ எல்லா மட்டத்துலேயும் சேர்ந்து தான் வாழ வேண்டியிருக்கும். இப்பொழுதே குறுகிய வட்டம் போட்டு உன்னைப் போல் ஆக்கிடாதே."

"போதும் நிறுத்துங்க. விட்டா ஒரு பிரசங்கமே பண்ணிடுவீங்க. நான் அவளைக் கவனிக்

குற விதமா கவனிச்சுக்கிறேன்."

"உன்னை மாத்தவே முடியாது." கோபமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார் மீனுவின் அப்பா.

"மீனு, நான் வந்து ரொம்ப நேரமாச்சு. எங்க அம்மா தேடுவாங்க. நாளைக்கு வரேன்" என்றாள் சுகன்யா.

"சரி சுகன்யா."

"ஏய் மீனு, சாப்பிட வா" அம்மாவின் குரல், மீனுவை உந்த, "இதோ வரேம்மா" என்று ஓடினாள்.

மறுநாள் எப்பொழுது பொழுது புலரும் என்று இருந்தது சுகன்யாவுக்கும் மீனுவுக்கும்.

காலையில் மீனுவைச் சந்திக்க ஓடினாள் சுகன்யா.

"எனக்கு எது உன் வீடுன்னு தெரியாது. தெரிஞ்சா நானே உன் வீட்டுக்கு வந்திருப்பேன்" என்றாள் மீனு.

"அதோ அந்தப் பூச்செடி இருக்கே, அந்த வீடுதான். நாளைக்கு என் வீட்டிற்குக் கட்டாயம் வரணும்."

"சரி வா, விளையாடலாம்."

இருவரும் விளையாடியதில் நேரம் போனது தெரியவில்லை.

"சுகன்யா, சுகன்யா" வாசலில் சுகன்யாவின் அம்மா அழைக்கும் குரல் கேட்டது.

"இதோ 'வர்றேம்மா! மீனு, அம்மா தேடிக்கிட்டு வந்துட்டாங்க. நான் வரேன்" என்றபடி ஓடினாள் சுகன்யா.

"ஏய் மீனு யாரங்கே? யாரையும் உள்ளே விடாம வெளியிலேயே பேசி அனுப்பு. கண்டவங்களையும் தராதரம் தெரியாம உள்ளே அனுமதிச்சா நாமதான் துன்பப்படணும். பழைய இடத்தில் பழகின மாதிரி இங்கே பழகக் கூடாது" என்று கோபப்பட்டார் மீனுவின் அம்மா.

சுகன்யாவின் அம்மாவுக்கு அந்த வார்த்தைகள் ஈட்டியாகப் பாய்ந்தன. அதன் பிரதிபலிப்பு சுகன்யாவின் மீது கோபமாகத் திரும்பியது.

"வாடி, நீ இங்கே வந்ததாலதான் நான் படியேறி வந்து பேச்சு வாங்க வேண்டியிருக்கு. இனிமேல் இந்த வீட்டுப் பக்கம் வந்தே, காலை ஒடச்சுடுவேன்" என்று சுகன்யாவின் அம்மா அழைத்துப் போனார்.

மீனுவுக்குத் தன் அம்மா மீது கோபம் ஏற்பட்டது. சுகன்யா அழுதவாறே தன் அம்மாவைப் பின்தொடர்ந்து சென்றாள்.

மீனு மாடியேறி எதிர் வீடு தெரிகிறதா என்று நோக்கினாள். சுகன்யாவிடம் மன்னிப்புக் கேட்க மனம் துடித்தது. சன்னலின் வழியாக எட்டிப் பார்த்தாள். இன்னும் கொஞ்சம் மேல்நோக்கி எம்ப வேண்டியிருந்ததால் அருகிலுள்ள டீப்பாயை எடுத்து அதன் மேல் ஏற முயன்றாள். டீப்பாய் சரிய, மீனு அருகிலுள்ள மீன் தொட்டியின் மீது குப்புற விழுந்தாள். மீன் தொட்டி உடைந்து சிதறியது.

சத்தம் கேட்டு மீனுவின் அம்மா காமினி ஓடி வந்தார். தன் மகள் கிடக்கும் கோலத்தைப் பார்த்து, ஓவென அழுதார். உடனே போன் செய்து டாக்டரையும் கணவரையும் வரவழைத்தார். டாக்டர், கண்ணாடித் துண்டு கண்களில் பாய்ந்திருப்பதால் உடனே கண் மருத்துவமனைக்குச் செல்ல துரிதப்படுத்தினார்.

"டாக்டர், என் பெண்ணைக் காப்பாத்துங்க. எல்லாம் அந்த எதிர் வீட்டுச் சனியனால வந்தது" என்று படபடத்தார் மீனுவின் அம்மா.

டாக்டர் சோதித்ததில், கண்களை எடுக்க வேண்டிய நிலையைப் பற்றிக் கூறினார்.

"டாக்டர் என் பொண்ணு இனிமேல் பார்க்க முடியாதா?" காமினி. கதறினார்.


"வேறு யார் கண் கிடைத்தாலும் பொருத்தலாம். அதன் மூலம் பார்வை

"இன்னிலேர்ந்து கேபிள் டி.வி. பார்க்கிறதில்லைன்னு நான் முடிவு பண்ணிட்டேன்டா!"

"அப்படியா! பரீட்சை வருவதால்தானே இந்த முடிவு?"


"எங்க வீட்டில் கேபிள் இணைப்பை எடுத்துட்டாங்களே!"

– நெ. இராமன்



குறுக்கெழுத்துப் புதிர் விடை

ணி	டா	ட்	1 ப	■	சை	ட்	ரா	2 தி
3 பி	■	■	ண	■	4 தி	■	■	ரு
■	5 மே	க	ம்	■	■	லி	ல்	6 நெ
ன்	■	■	■	டு	7 மா	■	■	ல்
8 ட	ம்	ட	ம்	■	ன்	த	ந்	9 வே
ள்	■	■	10 நா	ரை	■	■	■	லி
பி	ம்	11 து	■	■	12 ப	க	ல்	■
ம்	■	■	13 தே	■	ட்	■	■	14 கூ
15 வி	ண்	மீ	ன்	■	16 சி	த்	தி	ரை



கிடைக்க வாய்ப்புண்டு" என்றார் டாக்டர்.

"டாக்டர் என்ன செலவானாலும் பரவாயில்லை. என் மகளுக்குக் கண் கொடுங்க என்று அழுதார் மீனுவின் அம்மா."

கண் தானத்திற்குப் பல இடங்களில் முயற்சி செய்யப்பட்டு, இறுதியில் மீனுவுக்குக் கண் பொருத்தப்பட்டு, அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

அன்று கண்கட்டுகளை பிரிக்கும் நாள். மீனுவுக்கு சுகன்யாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. தன் அப்பாவிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று எண்ணினாள்.

டாக்டர் கண் கட்டுகளைப் பிரித்து, மீனுவுக்கு பார்வையைச் சோதித்தார்.

"டாக்டர் என் கண்கள் நன்றாகத் தெரிகின்றன" என்று மகிழ்ச்சியுடன் கூறினாள் மீனு.

"டாக்டர் என் பொண்ணுக்குக் கண் கிடைச்சிடுச்சு. கண் கொடுத்த புண்ணியவான் யாருங்க? அவங்களுக்கு எவ்வளவு பணம் வேணும்னாலும் கொடுக்கலாம்" என்றார் மீனுவின் அம்மா.

"அவங்க பணம் வேண்டாமுன்னு சொல்லிட்டாங்க. எங்க பிள்ளையால மற்றொரு பிள்ளைக்கு வாழ்வு கிடைச்சா போதுமுன்னு சொல்லிட்டாங்க அவங்களை வரச் சொல்லியிருக்கேன்" என்றார் டாக்டர்.

அவர்களைப் பார்த்த காமினிக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சுகன்யாவின் அப்பா பேச ஆரம்பித்தார். "இருதய நோயாளியான சுகன்யா திடீர்னு போய்ச் சேர்ந்துட்டா. அப்பதான் உங்க பொண்ணுக்கு கண்ணு போனதும் என் பொண்ணோட கண்ணை டாக்டர் கேட்டார். சரின்னு சம்மதிச்சுட்டேன். இப்பதான் என் பொண்ணு சுகன்யாவின் ஆத்மா சாந்தியடையும்" என்று கண்ணீர் மல்கக் கூறினார்.

மீனுவின் மூலமாக சுகன்யாவின் கண்கள் பெற்றவர்களுக்கு நன்றி கூறின.

காமினி தன் செயல் கண்டு வெட்கித் தலைகுனிந்தாள்.



மரம் வெட்டினால்...

ஆசிரியர் மரங்களைப் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "மரத்தை வெட்டினால் மழை குறையும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது என் பக்கத்தில் உட்கார்ந்




திருந்த மாணவி குனிந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள். இதைக் கவனித்த ஆசிரியர் அவளை எழுப்பி "மரம் வெட்டினால் என்ன ஆகும்?" என்று கேட்டார். அவளோ "மரம் கீழே விழும் சார்!" என்று உற்சாகமாய் பதிலளித்தாள். ஆசிரியர், அவளைத் தவிர அனைவரும் சிரித்தோம்.

– சு. பிரியா,
பத்தாம் வகுப்பு
'அ' பிரிவு,
அரசினர் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

ஆங்கிலத்தில்...

எங்கள் பள்ளியில் ஆங்கிலம் வழி படிக்கும் மாணவிகள் ஆங்கிலத்திலேயேதான் பேச வேண்டும் என்று தலைமை ஆசிரியை கூறியிருந்தார். நாங்களும் சிரமப்பட்டு பேசிக் கொண்டிருந்தோம். ஒருநாள் மதிய உணவு இடைவேளையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது என் தோழி



வாயில் உணவை வைத்தபடி ஏதோ சொல்ல முற்பட்டாள். அதைப் பார்த்த இன்னொரு தோழி ''First மெல். Then tell'' என்றதும் எங்களுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை!

சு. செளம்யா,
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
புனித அலாய்சியஸ் மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.

நேர்வழி!

ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, ''எப்பொழுதும் குறுக்கு வழியில் யாரும் போகக் கூடாது. நேர்வழிதான் சிறந்தது'' என்று கூறினார். உடனே என் குறும்புக்கார நண்பன் எழுந்து ''சார், எங்கள் ஊரிலிருந்து நம்ம பள்ளிக்கூடத்துக்கு குறுக்கு வழியில் வந்தால் அரைமணி நேரம் ஆகும். நேர்வழியில் வந்தாலோ

உன் பெயர் என்ன?



ஒரு மணி நேரம் ஆகும். நேர் வழியில் வந்து லேட்டானால் பரவாயில்லையா சார்?'' என்றான். கோபப்பட்ட ஆசிரியர் ''திருடுதல், பொய் சொல்லுதல் போன்ற கெட்ட விஷயங்களைத்தான் நான் குறுக்கு வழின்னு சொன்னேன்'' என்றார். நண்பன் அமைதியாக உட்கார்ந்தான்.

ஏ.எல். சாதிக்,
காரைக்கால்.

பேச்சுத்திறன்!


எங்கள் வகுப்பிற்கு புதிதாக ஒரு மாணவன் வந்து சேர்ந்தான். அவன் அடிக்கடி பேசிக் கொண்டே இருந்தான். தமிழாசிரியர் கோபத்துடன் அவனை எழுப்பி ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அவன் இனிஷியலோடு ''பே. சித்திரன்'' என்று சொன்னான். அது பேச்சுத் திறன் என எல்லோர் காதிலும் விழுந்தது. ''அதுதானே பார்த்தேன். பேச்சுத்திறன் உன்கிட்ட அதிகமாகவே இருக்கிறதே!'' என்று ஆசிரியர் சொல்லவும் நாங்கள் சிரித்து விட்டோம். அவன் தலை குனிந்தபடி மன்னிப்புக் கேட்டான்.



– எஸ். கவிதா,
ஏழாம் வகுப்பு,
நெல்லை.

கரையுமா?

வேதியியல் பாட வேளை. ஆசிரியர் ஒரு குடுவையை எடுத்து ரசாயனத்தை ஊற்றி அதில் ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டார். பிறகு எங்களிடம் ''இந்த நாணயம் கரையுமா, கரையாதா?'' என்று கேட்டார். உடனே என் தோழி எழுந்து ''கரையாது சார்'' என்றாள். ''எப்படி சொல்றே?'' என்று ஆசிரியர் கேட்டார். ''காசு கரையுமென்றால் நீங்கள் உங்களுடைய காசைப் போட்டிருக்க மாட்டீர்கள்!'' என்றாளே பார்க்கலாம்!



– க. ரெனிதா,
பத்தாம் வகுப்பு,
அரசு மகளிர்
மேல்நிலைப் பள்ளி,
ஆண்டிபட்டி.

எழுதாத கவிதைக்குப் பரிசு!

நமது பள்ளியில் செயல்படும் இலக்கிய மன்றத்தின் சார்பில், பாரதியின் பிறந்த நாளை முன்னிட்டு மாணவர்கட்கு கவிதைப் போட்டி நடைபெற இருக்கிறது. 'தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் மாணவ மாணவியர் கவிதை படைக்க வேண்டும். வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு என இரு பரிசுகளும் முதல் பரிசை பெறுபவருக்கு 'இளங்கவி' என்ற பட்டமும் அளிக்கப்படும். பங்குபெற விரும்புவோர் தங்களின் பெயர்களை ஆசிரியர் திரு. மகாதேவன் அவர்களிடம் பதிவுசெய்து கொள்ள வேண்டுகிறோம். – பள்ளியின் அறிவிப்புப் பலகையில் இருந்த இந்த அறிவிப்பை மாணவர்கள் குழுமி நின்று படித்துக் கொண்டிருந்தனர்.

“நீ கவிதைப் போட்டியில் கலந்துக்கப் போறியா? உனக்கு ஏண்டா இந்த விபரீத ஆசையெல்லாம்?” ஜோசப்பைப் பார்த்துக் கிண்டலாய்க் கேட்டான் நசீர்.

“அறிவுமதி பெயர் குடுத்திருக்கான்னா, அதுல அர்த்தம் இருக்கு. பள்ளியில் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் கூட பேப்பரை எடுத்து வைத்துக் கொண்டு எதையாவது எழுதிக்கிட்டிருப்பா. அவ எழுதற தமிழ்க் கட்டுரையில் கூட கவிதை வாசம் இருக்குன்னு, ஒருசிலதை அடிக்கோடிட்டுக் கொண்டு வந்து தமிழாசிரியர் வகுப்பில் படிச்சுக் காட்டுவார். அந்த அளவுக்கு திறமை உள்ளவ பேர் குடுத்திருக்கா. உன் முயற்சி வீண் முயற்சிடா. அதுவும் அறிவுமதி கூட போட்டி போட்டு உன்னால் ஜெயிக்க முடியுமா?” உசுப்பேற்றினான் முருகன்.

“ஜெயிக்கிறேனா இல்லையாங்கிறதை போட்டி முடிவு வரும்போது தெரிஞ்சுக்குவீங்க. இளங்கவி பட்டத்தை நான் வாங்குகிறேனா இல்லையாங்கிறதை கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்க” சவாலாய்ச் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் ஜோசப்.

ஜோசப்பும் அறிவுமதியும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். அறிவுமதி படிப்பில் கெட்டிக்காரி. ஓய்வு நேரங்களில் நூலகத்திற்குச் சென்று விடுவாள். எப்போதும் எதையாவது படித்து குறிப்பெடுத்துக் கொண்டிருப்பாள். ஆண்டு விழாவில் பரிசளிப்பு நிகழ்ச்சியின் போது அறிவுமதியின் பெயர்தான் அடிக்கடி ஒலிக்கும். அதைக் கண்டு பல நேரங்களில் எரிச்சல்பட்டிருக்கிறான் ஜோசப். அறிவுமதி பரிசு பெறும்போதெல்லாம், தனக்கு ஏதோ அகௌரவம் நடப்பதாக ஒரு உணர்வு அவன் மனதில் தோன்றும்.

ஜோசப்பும் படிப்பில் படுசுட்டிதான். இருந்தாலும் ஒரு தேர்வில் கூட அறிவுமதியை வென்று முதல் இடம் பெற அவனால் முடியவில்லை. அதிக மதிப்பெண் எடுத்து அவளை வென்று காட்ட வேண்டும் என்பதே அவனுக்கு கடும் முயற்சியாய் இருந்ததனால் பிற போட்டிகளில் அவனால் கவனம் செலுத்த இயலவில்லை. வெறுத்துப் போயிருந்த நேரத்தில்தான் இந்தக் கவிதைப் போட்டி பற்றிய அறிவிப்பு வந்திருந்தது.

'எப்படியாவது இந்த 'இளங்கவி' பட்டத்தை வாங்க வேண்டும். பள்ளி இறுதி

வகுப்பில் படிக்கிறோம். இந்த ஆண்டில் நடைபெற இருக்கும் கடைசிப் போட்டியும் இதுதான். இதைத் தவற விட்டால் வேறு வாய்ப்பும் இல்லை. என்ன செய்வது' என்று ஜோசப் தீவிரமாய் சிந்தித்த போதுதான் அவன் மனது ஒரு அற்புதமான யோசனையைத் தர, நிச்சயம் வென்று விடலாம் என்ற நினைப்பில் தனது பெயரைப் பதிவுசெய்து கொண்டான்.

ஜோசப் படிக்கும் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரியும் கன்னியப்பன், ஜோசப் வீட்டின் மாடிப் பகுதியில்தான் குடியிருக்கிறார். அவரின் துணையுடன் எப்படியும் இந்தப் போட்டியில் வென்று விடலாம் என்பது அவன் திட்டமாக இருந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை. தமிழாசிரியர் கன்னியப்பனைப் பார்ப்பதற்காக மாடிக்குப் போனான் ஜோசப்.

"வா... ஜோசப், என்ன விஷயம்?" தனக்கே உரிய மெல்லிய புன்னகையுடன் அவனைப் பார்த்துக் கேட்டார்.

"ஒண்ணுமில்லை சார். நம்ம பள்ளியில 'தன்னம்பிக்கை' அப்படீங்கிற தலைப்பில் நடக்கும் கவிதைப் போட்டியில் நான் பெயர் குடுத்திருக்கேன்."

"ரொம்ப மகிழ்ச்சி. ஆர்வம்தான் முயற்சிக்கு அடிப்படை. நீ வெற்றி பெற எனது நல்வாழ்த்துகள்."

"ரொம்ப நன்றி சார். போட்டி தொடர்பாதான் உங்க உதவியை நாடி வந்திருக்கேன்."

"என்னோட உதவியா...? என்ன வேணும் சொல்லு?"

"சார்... எனக்குக் கவிதை எழுதி அவ்வளவா பழக்கம் இல்லை. ஏதோ ஒரு அசட்டு தைரியத்தில் போட்டியில் பேர் குடுத்திட்டேன். கலந்துக்காம போயிட்டா வகுப்பு மாணவ மாணவிகள் மத்தியில் கேவலமாயிடும் சார். நீங்கதான் எனக்கு எப்படியாவது..." தயங்கித் தயங்கி வார்த்தைகளைப் பிரயோகித்தான் ஜோசப்.

அவன் என்ன சொல்ல வருகிறான் என்பதைப் புரிந்து கொண்ட ஆசிரியர்,

"சரி, அந்தத் தலைப்பில் நீ கவிதையை

மு. நடராசன்



எழுதி எடுத்துக் கொண்டு வா. அதை நான் திருத்தி ஒழுங்குபடுத்தித் தருகிறேன்'' என்றார்.

"நான் முயற்சி செய்தேன் சார். எனக்கு சரியா வர மாட்டேங்குது. மேலும் நீங்களே எனக்கு எழுதிக் கொடுத்தீர்கள் என்றால் வெற்றி உறுதியாயிடும்'' தயக்கமில்லாமல் கேட்ட ஜோசப்பைப் பார்த்து,

''அப்படியா, நானே எழுதித் தரணுமா... கொஞ்சம் பொறு" என லேசான புன்னகையுடன் அவனைப் பார்த்துக் கூறிவிட்டு ,உள்ளே சென்றவர் சற்று நேரம் கழித்து திரும்பி வந்தார். அவர் கையில் பழைய வாரப் பத்திரிகை ஒன்று இருந்தது.

இருக்கையில் அமர்ந்து, அதன் பக்கங்களைப் புரட்டியவர், "இதோ...'' எனக்கூறியபடியே அந்தப் பக்கத்தை மடித்து அவன் கையில் கொடுத்தார்.

'தன்னம்பிக்கை' என்ற தலைப்பில் யாரோ எழுதிய ஒரு கவிதை அதில் இருந்தது!

''தன்னம்பிக்கை என்ற தலைப்பில் உனக்கு ஒரு கவிதைதானே வேண்டும். இதை எழுதிக் கொள் ஜோசப்.''

''சார்... இது வேற யாரோ எழுதி பத்திரிகையில வெளிவந்திருக்கே...'' தயங்கினான் ஜோசப்.

''அதனாலென்ன? உன்னைப் பொறுத்தவரை யாராவது எழுதிக் கொடுத்து, நீ பரிசு வாங்கணும் அதானே உன் நோக்கம்?''

"இல்ல சார்... நீங்க எழுதிக் கொடுத்திங்கன்னா... நீங்கதான் எழுதிக் கொடுத்திங்கன்னு யாருக்கும் தெரியாது...''

"இது நல்ல வேடிக்கை ஜோசப். வேற ஒருத்தர் எழுதிக் கொடுத்து அதை நீ பயன்படுத்திக்கணும், ஆனா அது வேற ஒருத்தர் எழுதிக் கொடுத்ததுதான் என்று யாருக்கும் தெரியக் கூடாது. இது கேவலமில்லையா? தப்பில்லையா?

''நான் ஒன்று கேட்கிறேன் பதில் சொல்லு. நீ கடுமையா உழைத்து, கண் விழித்துப் படித்துத் தேர்வு எழுதுகிறாய். தேர்வு அறையில் படிப்பில் ஆர்வமில்லாத மாணவன் ஒருவனுக்கு, ஆசிரியர் விடை முழுவதையும் சொல்லித் தருகிறார். அதன் காரணமாக அந்த மாணவன் உன்னை விட அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்றால் உன் மனநிலை எப்படி இருக்கும்? நீ அதை நினைத்துக் கொதிப்படைய மாட்டாயா? கோபப்பட மாட்டாயா?

"ஒரு ஆசிரியர் என்ற முறையில் உன் வெற்றிக்கு நான் துணையிருக்கலாமே யொழிய, நானே முழு முயற்சி செய்து உன் வெற்றியை அமைத்துத் தருபவனாக இருப்பது நியாயமானது அல்ல. அப்படிச் செய்தால் அது உன் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிவதைப் போலாகும்.


''சுயமாக முயற்சி செய் ஜோசப். ஒருவேளை அந்த முயற்சியில் உனக்கு தற்போது வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனால் எதிர்காலத்தில் நீ பெறப் போகும் வெற்றிகளுக்கு அது ஒரு வலுவான படிக்கல்லாகவாவது அமையும் என்பதில் சந்தேகமில்லை'' என்றார் தமிழாசிரியர்.

தன் தவறை மிக நாசூக்காக உணர்த்திய ஆசிரியரை நன்றியோடு பார்த்தான் ஜோசப். ஆசிரியரின் வார்த்தைகள் அவன் மனதில் நம்பிக்கையையும் தைரியத்தையும் தோற்றுவித்தன. நிச்சயம் இந்தப் போட்டியிலிருந்து அவன் பின் வாங்கப் போவதில்லை!

''ஏண்டா நாலையும், மூணையும் கூட்டி பதில் சொல்லத் தெரியலையா?''

''தெரியும் சார். நீங்கதானே சொன்னீங்க இதெல்லாம் மனக்கணக்குன்னு. அதனால மனசுக்குள்ளேயே சொல்லிக்கறேன்.''

— இரா. கமலக்கண்ணன்





கோகுலத்துக்கு சந்தா செலுத்திவிட்டீர்களா?

மாதுவும் ஜானுவும் கோகுலத்திற்கு சந்தா செலுத்த எவ்வளவு ஆர்வமாக ஓடி வருகிறார்கள்! இவர்களைப் போல் உங்களுக்கும் கோகுலத்தைப் படிக்க ஆர்வம் இருக்கும். நீங்களும் சந்தா செலுத்தலாமே! அல்லது நீங்கள் ஏற்கெனவே சந்தாதாரராக இருந்தால் உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா செலுத்தலாமே!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/-. ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



பிருந்தாவனம்

மண் வாசனை வருவது ஏன்?

மண்வாசனை!

மண்ணில் இரும்பு, அலுமினியம், கால்ஷியம் போன்ற பல தாதுப் பொருள்கள் விரவியுள்ளன. தவிர மரம், செடி, கொடி, இலைகள் முதலியவை மட்கிப் போய் அந்த மட்கும் கலந்துள்ளது. சூடான தரைப் பரப்பில் முதலில் விழும் மழைத் துளி தரையைத் தொட்டவுடன் ஆவியாகி உயரே கிளம்புகிறது. அவ்வாறு கிளம்பும் போது 'ஹ்யூமஸ்' எனப்படும் மட்கின பகுதியும் உயரே எழ, மண்வாசனை உண்டாகிறது.

அனைவர்க்கும் அறிவியல் என்ற நூலில் இருந்து


தகவல் :

எல். கோபாலகிருஷ்ணன், வேலூர் – 6.



பாசிகள்

உலகில் தோன்றிய முதல் தாவரத்தின் பெயர் நீலப் பசும்பாசி. இவற்றின் பாறைப் படிவங்கள் மூலம் இவை முன்னூற்று இருபது கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று தெரியவந்துள்ளது. இந்த நீலப் பச்சை பாசிகள் இன்றும் உயிர் வாழ்கின்றன. இவை ஒரே தொகுதி



யாக இணைந்து பாறைப் படிவங்களைத் தோற்றுவிக்கின்றன.

– இரா. கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை.



• மிஸஸ் ஆப்ரா என்ற இங்கிலாந்துப் பெண்மணிதான் உலகின் முதல் பெண் நாவலாசிரியர்.

• 'நியூயார்க் வேர்ல்டு' என்ற பத்திரிகைதான் 1943-ம் ஆண்டு முதன் முதலில் குறுக்கெழுத்துப் போட்டியை அறிமுகப் படுத்தியது.

– க. பூங்கொடி, சித்தோடு.



பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் கணக்கு ஏப்ரல் மாத முதல் தேதியிலிருந்துதான் தொடங்கும். ஆனால் உலக வங்கியின் கணக்கு செப்டெம்பர் மாத முதல் தேதியிலிருந்து தொடங்குகிறது.

ஆதாரம் : **பொது அறிவுக் களஞ்சியம்,**

– சீர்காழி. ஜே. பலராமன்

உங்களுக்குத் தெரியுமா?

● உமிழ்நீர் சேர்ந்தால்தான் உணவு ருசிக்கும். ● நாம் தும்மும் வேகம் மணிக்கு 320 கி.மீ. ● ஒருவர் தூங்குவதற்கு ஏழு நிமிடமாகும். ● மூளை செல்கள் புதிதாகத் தோன்றுவது இல்லை. ● அடிக்கடி உடையும் எலும்பு காறை எலும்புதான்.

ஆதாரம் : **உங்களுக்குத் தெரியுமா?**

– ஆறுபாதி புகழேந்தி

சிக்கரி



காப்பித் தூளுடன் 'சிக்கரி' கலப்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த 'சிக்கரி' என்பது ஒருவகைச் செடியாகும். இதன் இலைகளை சாலட் செய்யப் பயன்படுத்துகின்றனர். இந்தச் செடியின் வேரை வறுத்துப் பொடி செய்து சிக்கரியாக்குகிறார்கள்.

ஆதாரம் : **பொது அறிவுக் களஞ்சியம்**

தகவல் : **சீர்காழி ஜே. பலராமன்**

ஒலிம்பிக் சின்னம்



வட்டமான ஐந்து வளையங்கள் இணைந்தது தான் ஒலிம்பிக் சின்னம். உலகின் அனைத்து மக்களையும் விளையாட்டு மூலம் இணைத்து நட்புறவைப் பலப்படுத்துவதே அதன் நோக்கம். ஐந்து வளையங்கள் ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களைக் குறிப்பிடுகின்றன. வண்ணங்கள் உலகில் உள்ள நாடுகளைக் குறிப்பிடுவன. இதில் உள்ள ஐந்து வண்ணங்கள் நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை மற்றும் சிவப்பு ஆகும். இந்த வண்ணங்களில் ஒன்றேனும், ஒவ்வொரு தேசத்தின் கொடியிலும் கட்டாயம் காணப்படும். ஒலிம்பிக் கொடி இரண்டு வகைப்படும். கோடைக் கால ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கு ஒரு கொடியும் குளிர்கால விளையாட்டுக்கு மற்றொன்றும் பயன்படுத்தப்படுகிறது.

– எஸ். ராஜம், காந்தி கிராமம்.

ஏழு 'மணி நேரம்!


1893-ம் ஆண்டு 'நியூ ஆர்லியன்'



சில் நடந்த போட்டிதான் உலக வரலாற்றிலேயே நீண்ட நேரம் நடைபெற்ற குத்துச் சண்டை. அமெரிக்காவைச் சேர்ந்த ஆண்டி போவன், ஜாக்பர்க் என்ற இரண்டு வீரர்களும் ஏழு மணி நேரம் தொடர்ந்து சண்டையிட்டு, மிகவும் களைப்படைந்ததால் 110 ரவுண்டுகளுக்குப் பிறகு போட்டி டிராவில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

வெள்ளைக் காண்டாமிருகம்

காண்டாமிருகங்களை நீங்கள் மிருகக் காட்சிச் சாலையில் பார்த்திருப்பீர்



கள். அவை கறுப்பு நிறத்தில் காணப்படும். அல்லது வெளிறிய நிறத்தில் காணப்படும்.

ஆனால் வெள்ளை நிறக் காண்டாமிருகம் ஒருகாலத்தில் இருந்திருக்கிறது என்றால் நமக்கு ஆச்சரியம்தானே! இப்போது வெள்ளைக் காண்டாமிருகம் இல்லை என்றே கூறலாம். இந்த வெள்ளை நிறக் காண்டாமிருகங்களின் எடை மூன்றரை டன்கள் ஆகும். கொம்பின் நீளம் மொத்தம் ஐந்து அடி!

நிலவில் இரவு பகல் உண்டா?

இரவு – பகல் என்பது பூமியில் பனிரெண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை நீடிக்கும். இதே போல சந்திரனில் இரவு பகல் நீடிக்குமா?

இரவு பகல் வரும். ஆனால் இங்கு உள்ளதைப் போல பனிரெண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை வராது.

பகல் என்றால் இரண்டு வாரங்கள் பகலாகவும் இரவு என்றால் இரண்டு வாரங்கள் இரவாகவும் இருக்கும். நிலவில் சூரிய அஸ்தமனத்தைக் காண வேண்டுமென்றால் இரண்டு வாரங்கள் ஒரே இடத்தில் காத்திருக்க வேண்டும்.

நமக்குச் சொந்தமில்லை

நம் நாட்டில் இன்று பிரபலமாக இருக்கும் பல பயிர்கள் நம் நாட்டுக்கு உரியவை அல்ல. வெளிநாடுகளில் இருந்து வந்தவை. கம்பும் சோளமும் ஆப்பிரிக்காவில் இருந்து வந்தவை. திராட்சை மொகலாயர்களால் ஆப்கானிஸ்தானத்தில் இருந்து வந்தவை. புகையிலை, வேர்கடலை, உருளைக்கிழங்கு சர்க்கரை வள்ளிக் கிழங்கு, அன்னாசி ஆகியவற்றை இங்கு அறிமுகப்படுத்தியவர்கள் போர்ச்சுக்கீசியர்கள். ஸ்பெயினிலிருந்து தக்காளியும், சீனாவில் இருந்து தேயிலையும் சீதாப்பழமும் ஐரோப்பாவிலிருந்து முட்டைக் கோஸ், காலிஃபிளவரும் வந்தன.

– **ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.**



விடுகதைப் பக்கம்

1. கண்கள் இல்லாமல் அழுவாள்,
எண்ணெய் இல்லாமல் எரிவாள்
– அவள் யார்?
2. வயிறு உண்டு சாப்பிடாது,
காது உண்டு கேட்காது – அது என்ன?
3. வாழைத் தண்டு போலிருப்பேன்
ஆனால் சமைக்க முடியாது;
பளிச்சென ஒளி தருவேன்,
ஆனால் மின்னல் அல்ல – நான் யார்?
4. தச்சர்களிடமும் நான் இருப்பேன்,
வக்கீல்களிடமும் நான் இருப்பேன்
– நான் யார்?
5. படித்தும் வாங்கலாம்,
காற்றிலும் விடலாம் – அது என்ன?

– இரா. மாசிலாமணீஸ்வரி, சோழபுரம்.

விடை : 1. மெழுகுவர்த்தி, 2. துணிப்பை, 3. டியூப் லைட், 4. சட்டம், 5. பட்டம்.

---

1. மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன்
– அது என்ன?
2. ஐந்து தூண், நான்கு இடுக்கு
– அது என்ன?
3. ஒரு கிணற்றில் ஒரே தவளை
– அது என்ன
4. வட்ட, வட்ட இலை
தண்டும் இல்லை,
உயிரும் இல்லை
– அது என்ன?
5. வீட்டில் இருக்கும்
அண்டாவுக்கு
மூட தட்டு இல்லை
– அது என்ன?

– பொன் திருவரங்கன்,
ஆறாம் வகுப்பு 'அ' பிரிவு,
ஆர்.சி. நடுநிலைப்பள்ளி, மானாமதுரை.

விடை : 1. சர்க்கரை வள்ளிக்கிழங்கு, 2. விரல்கள், 3. நாக்கு, 4. அப்பளம், 5. கிணறு.

---

1. ஒரு மரம்; மரத்துக்குப்
பன்னிரண்டு கிளை, கிளைக்கு
முப்பது இலை – அவை என்ன?
2. வருவது போவது இரண்டு,
வந்தால் போகாது இரண்டு,
போனால் வராது இரண்டு
– அவை என்ன?
3. கட்டாமல், கறக்காமல்
காடேறித் திரியாமல் நின்ற
இடத்தில் ஒருபடி பால் – அது என்ன?



4. சித்திரப் பின்னல் கோட்டைக்குள்
போக வழியுண்டு, திரும்ப
வழியில்லை – அது என்ன?

– எஸ். ராஜம், காந்தி கிராமம்.

விடை : 1. ஆண்டு, மாதம், நாள்; 2. செல்வம் – வறுமை, புகழ் – பழி, மானம் - உயிர்; 3. இளநீர்; 4. எலிப்பொறி.

மண்ணுக்குள்ளே சிவப்பு மனிதன் – அவன் யார்?

1. எட்டுக்கால் ஊன்றி,
இருகால்
படமெடுத்து, வட்டக் குடை
பிடித்து வருகிறார் பண்ணையார்
– அவர் யார்?
2. செக்கில் ஆட்டாத எண்ணெய்,
விதையில் கிடைக்காத எண்ணெய்
– அது என்ன?
3. பருத்த வயிற்றுக்காரன்,
படுத்தே கிடப்பான் – அவன் யார்?
4. ஓடோடும் சங்கிலி, உருண்டோடும்
சங்கிலி, பள்ளத்தைக் கண்டால்
பாய்ந்தோடும் சங்கிலி – அது என்ன?

– எஸ். ஜவஹர்ருமேஷ்,
எட்டாம் வகுப்பு,
அரசினர் உயர் நிலைப் பள்ளி,
செட்டிமாங்குறிச்சி, சேலம்
மாவட்டம்.

விடை : 1. நண்டு, 2. மண்ணெண்ணெய், 3. தலையணை, 4. தண்ணீர்.

உங்கள் நூலகம்

யானைகளைப் பற்றிய வித்தியாசமான செய்திகள், பாபநாசம் குறள் பித்தன், பக்.92. ரூ.17/- மணிமேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம்சாலை, சென்னை – 17

யானைகளோடு பாகன் பேசும் மொழி 25 சொற்களையே கொண்டது. பில்லியர்ட்ஸ் ஆட்டத்தின் பந்துகள் யானைத் தந்தத்தி லிருந்து செய்யப்படுகின்றன போன்ற அதி சயமான யானையைப் பற்றிய தகவல்களை உலகம் முழுவதிலும் இருந்து இந்த நூலில் திரட்டித் தந்துள்ளார் ஆசிரியர். நமக்கு சாதாரணமாகத் தெரியாத பல தகவல்கள் உள்ளன.

என்றன் பெயர் பப்பாளி. என்றும் சூடு தந்திடுவேன்!

பாடிப் பழகு பாப்பா, கோ. ஜெயச் சந்திரன், பக்.96, ரூ.18/- கீர்த்திகா பதிப் பகம், 18, படேல் தெரு, குரோம்பேட்டை, சென்னை – 44.

சிறுவர்க்கேற்ற அருமையான பாடல் களின் தொகுப்பு. வழக்கமான பாடல் தலைப்புகளோடு அதிகம் பயன்படுத்தப் படாத சில தலைப்புகளிலும் பாடல்கள் உள் ளன. குழந்தைக் கவிஞரின் தாக்கம் பாடல் களில் தெரிகிறது. பப்பாளியைப் பற்றி ஒரு சுவையான குட்டிப் பாடல் இதோ–

என்றன் பெயர் பப்பாளி,
என்றும் சூடு தந்திடுவேன்
என்னில் உண்டே ஏ.பி.சி.
ஏற்ற அதிகச் சத்துக்கள்.

குடலைச் சுத்தம் செய்திடுவேன்
கடும் புண்ணை அகற்றிடுவேன்,
உடலைப் பேணிக் காப்பதிலே
உவந்தே முதன்மை இடம்பெறுவேன்!

வீரனும் சூரனும், கண்ணாடி ராசேந்திரன், பக்கம் 96, ரூ. 18/- திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளன் தெரு, சென்னை – 17.



இருபது சிறுகதைகளின் தொகுப்பு. பெரும்பாலானவை விலங்கு, பறவைகளை வைத்து எழுதப்பட்டவை என்பது சிறப் பானது. கதைகளுக்குப் படங்களும் உண்டு. இது குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஏ.வி.எம். அறக்கட்டளை தங்கப் பதக்கம் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நட்பின் பெருமை, ஆர். பொன் னம்மாள், பக்கம் 96, ரூ.18/- கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளன் தெரு, சென்னை – 17.

சிறுவர் இலக்கியம் படைப்பதில் விரல் விட்டு எண்ணக்கூடிய மகளிர் வரிசையில் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண் டிருக்கும் ஆசிரியையின் வலுவான நீதிக் கதைகள் அடங்கிய தொகுப்பு. பத்துக் கதை கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் ஒரு பண்பைப் புகட்டுகின்றன. கதைகளுக் குப் படங்களும் உள்ளன.

பாலர் நீதிக் கதைகள், டி.வி.ஜி. இராமரத்தினம், பக்கம் 78, ரூ. 30/- இராமநாதன் பதிப்பகம், பிளாட் எண்.4698, ஏஏ–144, மெயின் ரோடு, அண்ணாநகர், சென்னை – 600 040.

இருபத்தேழு நீதிக் கதைகள் இதில் உள்ளன. பெரும்பாலான கதைகள் ஒரு நல்ல நெறியை அழுத்தமாக உணரவைக்கின்றன. சில புதுமெருகு கொடுக்கப்பட்ட பரம்பரைக் கதைகளும் உள்ளன. ஒவ்வொரு கதைக்கும் ஒரு முழுப்பக்கப் படம் உள்ளது.

— ரே




நமக்குள் ஓர் அலாரம்!

நீங்கள் நாளைக் காலை 4 மணிக்கு எழுந்து நண்பர்களுடன் ஊட்டிக்குச் செல்ல வேண்டும். என்ன செய்வீர்கள்? அலாரம் வைத்து எழுந்திருப்பீர்கள். அல்லது உங்கள் அன்பான அம்மாவை விட்டு எழுப்பச் செய்வீர்கள். அலாரம் அடித்தாலும், அதன் தலையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டுத் தூங்கி விடுபவர்களும் உண்டு. அம்மா உங்களின் போர்வையை உருவி எழுப்பினாலும் கூட, "ப்ளீஸ்ம்மா, இன்னும் 5 நிமிஷத்தில் எழுந்து விடுகிறேன்" என்று கெஞ்சி, மீண்டும் குறட்டை விடுபவர்களும் உண்டு. ஆனால் சிலர் படுக்கச் செல்லும் போது, மறுநாள் காலை எத்தனை மணிக்கு விழிக்க வேண்டுமென மனதுள் முடிவு செய்து விட்டுப் படுக்கிறார்களோ, அத்தனை மணிக்குச் சற்று முன்னதாக அலாரமின்றியே, 'டாண்' என்று விழித்து விடுகின்றனர்! இது எப்படி? உங்களின் மூளைக்குள்ளேயே, உங்களை உசுப்பி எழுப்பி விட்டு விடும் அலாரம் ஒன்று இருப்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்! இதனை அறிய, ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, அதனைப் பற்றிய தகவல்கள் பிரிட்டிஷ் ஆராய்ச்சி நாளிதழான 'நேச்சரி'ல் வெளியிடப்பட்டது.

வடஜெர்மனியிலுள்ள, லூபெக் பல்கலைக்கழக மருத்துவமனையைச் சேர்ந்த, ஜான் பார்ன் மற்றும் அவரது குழுவினர், "நமது மூளை, நம்மின் தினப்படி வேலைகளையெல்லாம் பட்டியலிட்டு, அவற்றை வரிசைப்படி சரியான பாதையில் செயல்பட வைக்கிறது. நாம் காலையில் வழக்கமாய் எழப் போகும் நேரத்திற்கு, சரியாக ஒரு மணி நேரம் முன்னதாக, 'ஸ்டிரஸ் ஹார்மோன்கள்' எனப்படும் 'அட்ரினோ கார்ட்டிகோ ட்ரோபிக் ஹார்மோன்களை (ACTH) அதிகமாக சுரக்கச் செய்து, இரத்தத்தில் கலக்கச் செய்து, உடல் முழுவதும் செலுத்துகிறது. நாம் கண் விழிக்கக் காரணமான ஹார்மோன் இதுவே. இதுதான் நம் மூளைக்குள் அலாரம் ஒலிக்கச் செய்து, நம்மை விழிக்கச் செய்யும் வேதி அலாரம்" என்கிறார்கள்.


ஜானும் அவரது குழுவினரும், "தூங்கும் போது கூட, ஏதாவது எதிர்பாராத நிகழ்வுகள் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பில் மூளை, ACTH ஹார்மோனை எந்த நேரமும் சுரக்கச் செய்யத் தயாராய் வைத்திருப்பதால், நாம் விழிப்பதற்கு ஒரு மணி நேரம் முன், இரத்தத்தில் ACTHஐ கலக்கச் செய்கிறது" என தெரிவிக்கின்றனர்.

– எஸ். மோகனா



கோகுலம் சுழல் கோப்பை!

இந்த ஆண்டு கோகுலம் சுழல் கோப்பையைப் பெற பெரியதச்சூர், துத்திப்பட்டு, லால்பேட்டை, ஆண்டிபட்டி, மதுரை, வெள்ளோடு, சென்னையைச் சேர்ந்த பள்ளிகளுக்கிடையே கடும் போட்டி நிலவி வருகிறது. இந்த ஏழு பள்ளிகளுடன் உங்கள் பள்ளியும் போட்டியிட இப்போதும் கூட வாய்ப்பு அதிகம் உள்ளது. உங்கள் பள்ளியிலிருந்து படைப்புகளை உடனே கோகுலத்திற்கு அனுப்பி வையுங்கள். கோப்பையை வெல்லுங்கள்.



அறுசுவை விருந்து!

பணையூரில் அண்ணன், தம்பி இருவர் ஒற்றுமையாக இருந்தனர். இருவருக்கும் திருமணமாயிற்று. கொஞ்சம் நிலம் இருந்தது. அதைப் பாகம் பிரித்துக் கொண்டனர்.


தம்பி தன் பங்கு நிலத்தை விற்று வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். அண்ணன் தன் பங்கு வயலில் விவசாயம் செய்தான். முன் அனுபவமின்மையாலும், கவனக் குறைவினாலும் தம்பிக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. அண்ணனுக்கோ விளைச்சலில் நல்ல லாபம் வந்தது.

வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தத் தம்பி கடன் வாங்கிக் கொண்டே போனான். அண்ணன் சொத்துக்களைச் சேர்த்தான். ஒருநாள் தம்பி மனைவி அஞ்சுகம்,

''வியாபாரத்துக்கு இன்றோடு முழுக்குப் போடுங்கள். இருக்கிற சரக்கை விற்று கடனைக் கொடுத்து விடலாம். வெளியூர் சென்று கண்ணியமான வேலை ஒன்றைத் தேடிக் கொண்ட பின் இங்கு வந்து எங்களை அழைத்துச் செல்லுங்கள். பெருமையோடு வாழ்ந்த ஊரில் சிறுமை வந்த பின் வாழ எனக்குப் பிடிக்கவில்லை!'' என்றாள்.

கணவனும் ஒப்புக்கொண்டான். சுறுசுறுப்பாகச் சரக்குகளை விற்றுக் கடன்காரர்களுக்குத் திருப்பிக் கொடுத்தான். பின்னர் ஒருநாள் வேலை தேடி வேற்றூர் செல்வதாகக் கூறினான். மறுநாள் அதிகாலை எழுந்து போகலாமென்றாள் மனைவி.

கொஞ்சம் பால் வாங்கிக் காய்ச்சி புரை ஊற்றினாள். விடியற்காலை எழுந்து சோறு பொங்கி, புதுத் தயிரை ஊற்றிக் கலந்தாள். பச்சை மிளகாயை நறு



விசாக அரிந்து போட்டுக் கிளறினாள். முதல் நாள் தயாரித்து வைத்திருந்த மாங்காய் ஊறுகாயை சாதத்தின் மேல் ஒரு கிண்ணத்தில் வைத்தாள். மூடிக் கணவனிடம் கொடுத்தவள் "மதியம் சாப்பிடுங்கள்" என்றாள்.

கால் கெஞ்சுமளவு நடந்தான் தம்பி. வெயில் மண்டையைப் பிளந்தது. அருகில் இருந்த ஒரு மூங்கில் மரத்தில் உணவுப் பாத்திரத்தைக் கட்டி வைத்து விட்டு மர நிழலில் படுத்தவன் அயர்ந்து தூங்கி விட்டான். சிறிது நேரம் சென்று பார்த்தால் மூங்கில் நிமிர்ந்ததால் உணவு தூக்கு வைத்திருக்கும் பை கைக் கெட்டாத உயரத்தில் போயிருந்தது.

வெயிலில் மூங்கில் உயரும். காலை, மாலை வேளைகளில் தாழ்ந்திருக்கும். "சரி, மாலையில் சாப்பிட்டு விட்டுப் பயணத்தைத் தொடரலாம்" என்று திரும்பப் படுத்துக் கொண்டான்.

அப்போது வான வீதியில் இரண்டு கந்தர்வர்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

"இதென்ன மூங்கில் மரத்தில் ஒரு மூட்டை தொங்குகிறது?" என்றான் ஒரு கந்தர்வன்.

"அது அதோ மரத்தடியில் தூங்குகிறானே, அவனுடையதாயிருக்கும்!" என்றான் மற்றவன்.

"வா! என்ன இருக்கிறதென்று திறந்து பார்த்து விடுவோம்" என்றபடி கீழிறங்கினான் முதல்வன். அடுத்தவனும் பின் தொடர்ந்தான். மூட்டையை அவிழ்த்தனர். கமகமவென்று தயிர் சாத வாசனை மூக்கைத் துளைத்தது.

இருவரும் தயிர் சாதத்தை காலி செய்து விட்டனர். "ஐயோ பாவம்! களைத்து உறங்குகிறான். பசியோடு எழுந்து மூட்டையைத் திறந்தால் ஏமாற மாட்டானா?" பரிதாபப்பட்டார்கள். தூக்கிற்குள் ஒரு தூக்கை வைத்து விட்டுப் போனார்கள்!

தம்பி விழித்து எழுந்தான். மூங்கில் தாழ்ந்து வளைந்து கொடுத்திருந்தது. மூட்டையை எடுத்துக் கீழே வைத்தான்.

மாலஸ்ரீ



அருகிலிருந்த ஓடையில் கை, கால்களைக் கழுவிக்கொண்டான். மூட்டையைப் பிரித்தான். தூக்கிற்குள் ஒரு தூக்கு இருப்பதைக் கண்டான். அதையும் பொறுமையுடன் திறந்தான்.

அதிலிருந்து ஒரு மங்கை வெளிப்பட்டாள். தூக்கில் அவள் கைவிட்ட போதெல்லாம் வாழை இலை, பச்சடி, வறுவல் பொரியல், அவியல், ஊறுகாய், அப்பளம், லட்டு, சாம்பார், ரசம், தயிர் என்று வந்து கொண்டே இருந்தது. தம்பியைச் சாப்பிடும் படி உபசரித்தாள் அந்த மங்கை.

சாப்பாடும் அற்புத ருசியுடன் இருந்தது. சாப்பிட்டு முடித்தவுடன் அவள் தூக்கிற்குள் அமர்ந்துகொண்டு மூடிக்கொண்டாள். தம்பியின் வியப்பும் மகிழ்ச்சியும் அளவிட முடியாததாக இருந்தது. பசியும் பட்டினியுமாக இருக்கும் தன் மனைவி மக்களும் வயிறாரச் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டு வீட்டிற்குத் திரும்பினான்.

கதவைத் திறந்த மனைவி பிரமிப்போடு "வேலை கிடைத்து விட்டதா?" என்றாள்.

உள்ளே வந்து கதவைத் தாளிட்டவன் "கிடைத்த மாதிரிதான். சாப்பிட்டு விட்டீர்களா?" என்று ஆவலோடு கேட்டான்.

"இல்லை" என்றாள் அஞ்சுகம்.

தூக்கைத் திறந்தான். என்ன வரப் போகிறதோ என்று குழந்தைகளோடு அஞ்சுகமும் ஆவலாய்ப் பார்க்க அதிசய நங்கை வந்து அத்தனை பேருக்கும் இலை போட்டு அறுசுவை உணவு பரிமாறினாள். மதியம் வந்தபோது சாப்பிட்ட வகைகள் வேறு; இது வேறாக இருந்தது.

அஞ்சுகமும், குழந்தைகளும் வியந்தபடியே உண்டனர். மதியம் ஒருதடவை, இரவு ஒரு தடவை பசித்தவர்களுக்கு உணவு பரிமாறும் போஜன சாலை நிறுவி சந்தோஷமாக வாழ்ந்தனர்.

அண்ணன் மனைவிக்கு மைத்துனர் குடும்பம் முன்னுக்கு வருவது பொறாமையை அளித்தது. அஞ்சுகத்திடம் பேசி அனைத்தையும் தெரிந்து கொண்டாள்.

கணவனை வற்புறுத்தி சோற்று மூட்டையோடு அடையாளம் சொல்லி அனுப்பினாள். தமையனும் மூங்கில் மரத்தில் மூட்டையைக் கட்டிவிட்டுத் தூங்கினான். கந்தர்வர்கள் அன்றும் வந்தனர். முன்பு சாப்பிட்ட ருசி அவர்களை மூட்டையைப் பிரிக்க வைத்தது.

ஆவலாய் ஆளுக்கொரு பிடி எடுத்து வாயில் போட்டுக் கொண்டவர்கள் 'தூ'வென ஆத்திரத்தோடு உமிழ்ந்தனர். மூன்று நாள் பழைய சோற்றில் புளித்த மோர் ஊற்றி 'ஏதோ மோகினிப் பிசாசுகளுக்குத்தானே!' என்று அலட்சியமாய் தமையன் மனைவி பிசைந்து கொடுத்திருந்த சோறு குடலைப் புரட்டியது. ஊறுகாயின் காரம் நாக்கில் எரிச்சலை ஏற்படுத்தியது.

கீழே குனிந்து தூங்கும் மனிதனைப் பார்த்தனர். பேராசை கொண்டு வந்திருக்கும் அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்க நினைத்தனர். இதிலும் அதே போன்று ஒரு தூக்கை வைத்து விட்டுச் சென்றனர்.

அண்ணன் எழுந்தான். உணவு தூக்கைத் திறந்து பார்த்தான். அதில் உணவில்லை. ஆனால் எதிர்பார்த்ததுபோல் தூக்கு இருந்தது கண்டு மகிழ்ந்தான். விரைந்து வீட்டிற்கு வந்து மனைவியிடம் அதைக் காண்பித்தான்.

அவள் கிராமத்திலுள்ள அனைவருக்கும் விருந்தளித்துத் தன் பெருமையைப் பறை சாற்றிக் கொள்ள விரும்பினாள்.

ஊரிலுள்ள ஆண், பெண் அனைவரும் குடும்பத்துடன் கூடி இருந்தனர். தம்பியின் குடும்பத்தை மட்டும் அழைக்கவில்லை! எல்லோரும் கடும்பசியுடன் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

பெட்டியைத் திறந்தான் அண்ணன் மனைவி. கத்தியைத் தீட்டியபடி இருவர் வந்தனர். புறக்கடையில் ஒருவர், வாசலில் ஒருவராய் உட்கார்ந்துகொண்டு ஒரு ஆள் விடாமல் மழுங்க மொட்டையடித்து அனுப்பினர்.

தம்பி குடும்பத்தைத் தவிர அந்த ஊரில் அனைவரும் மொட்டைத் தலையுடன் காட்சி அளித்தனர்.

"கரண்ட் போச்சுன்னு சொன்னியேடா, அது நடந்து போச்சா, சைக்கிளில் போச்சா?"

- எம்.பி.எம். ராஜவேலு



ஓவியப் போட்டி



அழகான கண்கவர் மயில்கள் என்றால் எல்லோருக்கும் பிடிக்கும். ஓவியப் போட்டியின் இந்த மாதத் தலைப்பு – மயில். இங்குள்ள படம் வண்ணத்தில் இல்லாவிட்டாலும் நீங்கள் வரைவது வண்ணப்படமாகவே இருக்க வேண்டும். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டு, மூன்று மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் முகவரியை அவசியம் குறிப்பிட வேண்டும்.

கடைசி தேதி : 20.9.99.

கோகுலம் க்விஸ் முடிவு

இப்போட்டியில் நிறைய பேர் கலந்து கொண்டாலும் பத்து பேரே சரியான விடைகளை அளித்துள்ளனர். எனவே பரிசு இவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. ச. அரசிமேகலா, பத்தாம் வகுப்பு, ஒய்.டபிள்யு.சி.ஏ. பள்ளி, திருச்சி.
2. அருணாகோபி, எட்டாம் வகுப்பு, அண்ணா ஆதர்ஷ் பள்ளி, சென்னை.
3. வெ. நடராஜன், திம்மராஜபுரம், திருநெல்வேலி மாவட்டம்.
4. பிரேமா மாணிக்கராஜ், வடக்கன் குளம், நெல்லை மாவட்டம்.
5. இ. நெடுஞ்செழியன், ஒன்பதாம் வகுப்பு, அ.உ.நி. பள்ளி, இராஜா நகரம் கிழக்கு.
6. கோ. சோபன் பாபு, புதுக்கோட்டை.
7. சங்கீதா, பத்தாம் வகுப்பு, சென்னை.
8. ஆர். ராதிகா, ராணிப்பேட்டை.
9. எம். உமாபதி, சோழபுரம்.
10. கே. இலக்கியஅரசு, ஒன்பதாம் வகுப்பு, ராயன்பாளையம், காரைக்கால்.

சரியான விடை :

1. ஸ்வீடன் நாட்டின் தலைநகர் ஸ்டாக்ஹோம்
2. மின்னோட்டத்தைக் கண்டுபிடித்தவர் மைக்கேல் பாரடே.
3. காவிரி மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிறது.
4. பூமி தன்னையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது என்பதைக் கண்டறிந்தவர் கோப்பர் நிக்கஸ்.
5. இரண்டு முறை உலகக் கோப்பையை வென்ற மேற்கிந்தியத் தீவு கேப்டன் கிளைவ் லாயிட்.
6. கரும்பு, புல் இனத் தாவரம்.
7. பட்டுத் துணியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் சீனர்கள்.
8. நம் உடலில் உள்ள பெரிய உறுப்பு தோல்.
9. காற்றை அளக்க உதவும் கருவி காற்றழுத்தமானி அல்லது பாரமானி.
10. பாரதியார் பிறந்த ஊர் எட்டயபுரம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

விளையாட்டுத் துறையில் இந்த ஆண்டு இந்தியாவிற்கு முக்கியமானது. கிரிக்கெட்டில் உலகக் கோப்பையைக் கோட்டை விட்டாலும் டென்னிஸிலும் செஸ்ஸிலும் மிகப் பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. உலக அளவில் மிகப் பெரிய விம்பிள்டன் பட்டத்தை வென்ற மகேஸ் பூபதி-லியாண்டர் பயஸ் ஜோடி இனியும் பிரியாமல், சேர்ந்து விளையாடி இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் என நம்புவோம்! அதேபோல் செஸ் விளையாட்டிலும் விஸ்வநாதன் ஆனந்த் உலக அளவில் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறார். இவர்களுக்கு நம் வாழ்த்துகள்!

புதிய கேப்டன்கள்!

உலகக் கோப்பை நடந்து முடிந்ததும் இங்கிலாந்து, இந்தியா மற்றும் இலங்கை கிரிக்கெட் கேப்டன்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்து கேப்டனாக இருந்த ஸ்டுவர்ட்டுக்கு பதில் நாசிர் ஹுசைன் கேப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தப் புதிய கேப்டன் இந்தியாவில் அதிலும் சென்னையில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தலைமையில் இங்கிலாந்து அணி நியூசிலாந்துடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

அடுத்ததாக கேப்டன் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர் இலங்கையின் கேப்டன் அர்ஜுன ரணதுங்கா. திறமையானவர். சென்ற உலகக் கோப்பையை வாங்கிக் கொடுத்தவர். ஆனால் அதற்குப் பின் இலங்கை அணி பிரகாசிக்கவில்லை. இப்போது கேப்டனாக பொறுப்பேற்றிருப்பவர் ஜெயசூர்யா. இவரது



• ரணதுங்கா



• ஜெயசூர்யா



* சச்சின்

பொறுப்பேற்றிற்கும் சச்சின் கடந்த 10 ஆண்டுகளாக உலக அளவில் தலைசிறந்த ஆட்டக்காரராக இருந்து வருகிறார். சென்ற முறையை விட இந்த முறை தமது பொறுப்பை சிறப்பாகச் செய்வார் என்பதில் சந்தேகமில்லை.

நடப்பு சாம்பியனான ஆஸ்திரேலியாவுடன் இந்தியாவும் இலங்கையும் ஆகஸ்ட் மாதத்தில் ஒருதினப் போட்டிகளில் விளையாட உள்ளன.

இந்தப் போட்டி புதிய கேப்டன்கள் இருவருக்கும் மிக முக்கியமானது. இருவரும் கோப்பையை வெல்ல முயற்சி செய்வார்கள். அதேபோல் நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியாவும் தனது புகழை



* நாசிர் ஹுசைன்

தக்க வைத்துக் கொள்ள இந்தப் போட்டியில் வெல்ல முயற்சி செய்யும்.

இறுதி ஆட்டம் வரை சென்று கோப்பையைக் கோட்டை விட்ட பாகிஸ்தான் அணியிலும் விரைவில் மாற்றம் வரப்போகிறது.

எது எப்படியோ, மீண்டும் கிரிக்கெட் பரபரப்பு ஆரம்பமாகி விட்டது.

தலைமையின் கீழ் இலங்கை அணி எப்படி விளையாடும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

நம் நாட்டில் சச்சின் டெண்டுல்கர் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அஜய் ஜடேஜாதான் அடுத்த கேப்டன் என எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கும் போது மீண்டும் சச்சின் டெண்டுல்கர் கேப்டனாகி இருக்கிறார். சச்சினுக்கு இந்தப் பொறுப்பு இரண்டாவது முறையாகக் கிடைத்துள்ளது. 1996 ஆம் ஆண்டிற்குப் பின் மீண்டும் தலைமை



கோகுலம் நியூஸ்!



கற்கால குகை

கெய்ரோவில் எகிப்திய மற்றும் பெல்ஜிய நாட்டுத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் கற்காலத்தில் இருந்த குகையைக் கண்டறிந்துள்ளனர். கி.மு.7000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்தக் குகையில் ஓவியங்கள், வேட்டையாடிய கருவிகள் போன்றவை காணப்படுகின்றன. கற்கால மனிதர்களைப் பற்றிய பல அரிய தகவல்களை இந்தக் குகை மூலம் நாம் அறிய முடியும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எலும்புக் கூடு

டைனோசர் காலத்தில் வாழ்ந்த ஓர் உயிரினத்தின் முழு எலும்புக் கூடு நில ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் பெயர் மோசாசர்ஸ். இது முதலையின் வடிவத்தை ஒத்துள்ளது. ஆனால் உருவத்தில் மிகப் பெரியது. இந்த உயிரினத்தின் எலும்புப் படிவம் முதல் முறையாக அண்டார்டிகாவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

முதல் பெண்!

முதல் முறையாக ஜலின் காலின்ஸின் என்ற பெண், கொலம்பியா விண்வெளி ஓடக் குழுவினருக்குத் தலைமை தாங்கிச் சென்றார். இந்தியாவில் பிறந்து, வெளிநாட்டில் வாழ்ந்த விஞ்ஞானி சுப்பிரமணியன் சந்திரசேகரின் பெயர் சூட்டப்பட்ட எக்ஸ்ரே தொலை நோக்கியை விண்ணில் பறக்க விட்டுள்ளது கொலம்பியா ஓடம். இந்தத் தொலை நோக்கி ஐந்து ஆண்டுகள் வரை வேலை செய்யும். கருந்துளைகள் மற்றும் விண்வெளித் திரள்களை ஆராய்வதே இதன் பணி.

நாணயங்கள்!


நாசிக்கில் பிரிட்டிஷ் ஆட்சியின் போது புழங்கப் பட்ட 49 செப்பு நாணயங்கள் கிடைத்துள்ளன. 1810, 1820, 1890 என நாணயங்களில் ஆண்டுகளும் பிரிட்டிஷாரின் முத்திரையும் பொறிக்கப் பட்டுள்ளது.

நினைவுச் சின்னம்!

தேசப் பிதா மகாத்மா காந்தியடிகளுக்கு வாஷிங்டனில் நினைவுச் சின்னம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது அக்டோபர் மாதம் காந்தியடிகள் பிறந்த இரண்டாம் தேதி திறக்கப்பட உள்ளது.


Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-

I ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!




II

எந்த இரு நாய்கள் வித்தியாசமாக உள்ளன



III பறவைகளைக் கண்டுபிடியுங்கள்!



பிருந்தாவனம்



சீன மொழியைக் கற்க வேண்டுமானால் முதலில் 1200 குறியீடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பிறகுதான் அந்த மொழியை ஆரம்பத்திலிருந்து கற்றுக் கொள்ள முடியுமாம்!

– ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.

விடைகள் :

I 1. குடை, 2. யானையின் புருவம், 3. மனிதனின் கை, 4. யானையின் முன் கால் நகம், 5. சூரியன்.

II 4, 5

III 1. கொக்கு, 2. மரங்கொத்தி, 3. கழுகு, 4. கிளி

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

